
# தமிழ் மகள்

● அன்பு ● அறம் ● ஆளுமை



SIVA YOGA SWAMIGAL

## இது ஒரு குடும்ப இங்கிதம்

ஆதி அருள் நெறிமன்ற வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EASY TELECOM

## CALL EASY TO $AVE

**Tel:(416) 921-2000        Fax:(416) 921-2617**

கனேடிய தொலைத் தொடர்பு நிறுவனங்களுக்கு நிகராக
தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஒரே நிறுவனம்
உலகின் எப்பாகத்திற்கும் எந்த நேரத்திலும்

# 60%* off

*** Plan A**

| | |
|---|---|
| **திட்டம் "A"**<br>**60% கழிவு**<br><br>**இலங்கை**<br>**ஒரு இலக்கம்**<br>**42¢/minute** | **திட்டம் "B" *   40% கழிவு** |
| | **திட்டம் "C" *   30% கழிவு** |

அதிகக்கூடிய சேமிப்புக்கு மிகப் பொருத்தமான திட்டத்தைத் தெரிவுசெய்யுங்கள்

| **திட்டம் A*** | **திட்டம் B*** | **திட்டம் C*** |
|---|---|---|
| **60%** கழிவு ஒரு வெளிநாட்டு இலக்கம் | **40%** கழிவு இரண்டு வெளிநாட்டு இலக்கங்கள் | **30%** கழிவு சகல இலக்கங்களுக்கும் |
| **60%** கழிவு ஒரு கனடா இலக்கம் | **40%** கழிவு இரண்டு கனடா இலக்கங்கள் | |
| **60%** கழிவு ஒரு அமெரிக்கா இலக்கம் | **40%** கழிவு ஒரு அமெரிக்கா இலக்கம் | |
| **15%** கழிவு ஏனைய இலக்கங்கள் | **15%** கழிவு ஏனைய இலக்கங்கள் | |

*ALL SAVINGS ARE ON TOP OF THE NON PROMOTIONAL EVENING AND WEEKENDS OFFERED BY YOUR LOCAL PHONE COMPANY

குறுகிய காலத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வாடிக்கையாளர்களாக இணைந்து கொண்ட தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற ஒரு தொலைத் தொடர்பு நிறுவனம் ***EASY TELECOM*** புதிதாக இணையும் வாடிக்கையாளர்களுக்கு ***இலவச தொலைத்தொடர்புக்கான 30 நிமிட கூப்பன்*** வழங்கும் திட்டம் தற்பொழுது நடைமுறையில் உள்ளது.

'தமிழ் மகன் ஒருவர் தமிழ் மக்களுக்கு ஆற்றும் தன்னிகரற்ற சேவை'

"Easy makes it easy to switch and save"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மகள்

**அன்பைவளர்ப்போம். அறத்தை பேணுவோம். ஆளுமையை முழுமையாக்குவோம்.**



பிரதம ஆசிரியர்
புலவர் ஈழத்துச் சிவானந்தன்

துணை ஆசிரியர்கள்
திருமதி. வசந்தா நடராசன்BA
சித்திரா மணாளன்

வெளியீடு
ஆதி அருள் நெறி மன்றம்
கனடா

பதிப்பாளர்
மீனா



முகவரி
133 MANVIL ROAD
SUITE 25
SCARBOROUGH
ONTARIO
M1L 4J5
CANADA



அச்சு வடிவமைப்பு
NESA GRAPHIC
(416) 588-3476
அட்டை வடிவமைப்பு
பா.ஞானபண்டிதன்

மாத இதழ் - 3


## கனடா வாழ் தமிழ் மக்களே !
## வணக்கம்! நலந்தானே? வாழ்க! வளர்க.

**ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி**
என்ற பழமொழியைப் போன்று

**ஊரும் வேரும் பேருக்குறுதி**
**உணர்வும் உண்மையும் உயிருக்குறுதி**
என்றபுதுமொழியைப் புலம்பெயர்ந்து புகுந்த நாட்டில் வாழும் நாம் நெஞ்சில் நிறுத்திக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் நாம் ஆல் போல் தழைத்து வேல் போல் வேரூன்ற முடியும்.

ஆலம் விழுதுகளைப் போன்ற நமது பிள்ளைகளை நம்மவர்களாய் உருவாக்கி வேப்ப மரம் போல் பயனுள்ள மக்களாகப் பவனி வர வைக்க முடியும். நமது பாரம்பரியங்களைப் புரிய வைப்பதிலேயே ஊரும் வேரும் அவர்கள் உள்ளத்தில் பதியமாகும். இன உணர்வும் சமய உண்மைகளும் அவர்கள் உதிரத்தின் உயிரணுக்களாய் உலவி அவர்களை ஆரோக்கியமான ஆளுமையோடு வாழச் செய்யும். இந்தப் பணி தமிழர்களாகிய எங்களுக்கு தனித்தும் ஒருமித்தும் ஆற்றவேண்டிய கடமையாய் இருப்பதை நாளும் பொழுதும் நாம் மறக்காது மனங்கொள்ள வேண்டும். ஊரைப்பற்றிய வேரைப்பற்றிய உண்மைகளையும் ஊட்டவல்ல ஒரு சாதனம் நமது சமயமே.

நமது சமயப் பெரியோர்களையும் அவர் தம் சாதனைகளையும் நினைவு கூர்வதோடு நமது பிள்ளைகளின் நெஞ்சங்களில் முளையிலேயே அவற்றினைப் பதித்து விடவும் வேண்டும். இது குறித்த முயற்சிகள் கனடாவில் நாலாபக்கங்களிலும் நடைபெறுகின்றன. இந்தப் பாரிய பணியின் ஒரு பங்காக ஈழத்து மா முனிவர், வீதி தோறும் நடந்த சிவயோகி, ' எப்பவோ முடிந்த காரியம் முழுதும் உண்மை ஒரு பொல்லாப்பும் இல்லை ' என்ற உபதேசம் அருளிய அனுபூதிச் செல்வர். சிவயோக சுவாமிகளின் 125 ஆவது ஜெயந்தி திருவிழா திருவுருவத்திரு உலாவாக நடைபெறப் போகின்றது. கனடா ஸ்ரீ சிவயோக சுவாமிகளின் சிவதொண்டன் நிலையமும் ஏனைய சமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து நடாத்தும் இத் திரு உலாவில் அனைவரும் குடும்பத்தோடும் குழந்தைகுட்டிகளோடும் பங்கு கொண்டு பயனடைய வேண்டுமென்பது தமிழ் மகளின் வேண்டுகோள்.

ஊருக்கும் வேருக்கும் உணர்வுக்கும் உண்மைக்கும் ஓர் உந்து சக்தியாய் இத் திரு உலா அமையத் திருவருள் துணை நிற்க வேண்டி தமிழ் மகள் பிரார்த்திக்கிறாள்.

15-7-1997

-பிரதம ஆசிரியர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் அவசியமா?

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

" திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே,"

ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லா இறைவனுக்கு ஆயிரந் திருநாமஞ் சூடிப் போற்றிய நாம் ஆயிரந் திருக்கோயில்களையும் எழுப்பி வழிபட்டிருக்கிறோம். சைவ சித்தாந்தத்தில் உருவ வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. உருவமற்ற எதனையும் நாம் உள்ளத்தால் நினைக்கமுடியாது. ஒன்றிமிருந்து நினைப்பதற்கு ஏதோ ஓர் உருவம் உள்ளத்திற் பதியப்பட வேண்டும். இந்த நோக்கத்துடனேயே பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்கள் நம் நாட்டில் எழுந்தன. ' எங்கும் நிறைந்த இறைவனை ஏன் ஒரு குறுகிய இடத்தில் வைத்துச் சிறைசெய்ய வேண்டும்', என்று சிலர் கேட்கிறார்கள் ஆண்டவன் எங்கும் நிறைந்திருந்தாலும் அவனருளை நாம் பெறுவதுபோன்ற உணர்வை எழுப்புகின்ற இடம் ஆலயந்தான். காற்று எங்கும் நிறைந்திருந்தாலும் வெப்பமும் புழுக்கமும் மிகுந்த சில நேரங்களில் அதனைப் போக்க விசிறிகொண்டு காற்றை வாங்கிக் கொள்கிறோம். இந்த விசிறிபோல் எமது மலவெப்பத்தை அகற்றி அருள் நிழலைத் தர ஆலயங்கள் அமைந்துள்ளன. சிவஞான போதம் பன்னிரண்டாஞ் சூத்திரம்,

" செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

என்பதாகும். சிவனடியார்களையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு தொழவேண்டும் என்று காட்டியுள்ளார் மெய்கண்டார். கல்லானாலும் விக்கிரகங்கள் சிவனை நினைப்பூட்டும். சீவன்முத்தர்களுக்கும் உடம்பு விடும்வரை ஆலய வழிபாடு முக்கியமென்று வற்புறுத்தப்படுகிறது. பக்திநிலையை எழுப்புகிற தன்மை திருக்கோயில்களுக்கு உண்டு. இந்த நிலையே எம்மை ஆண்டவன் திருப்பாதங்களில் இணைக்கின்றது.

மூன்று இடங்களில் நாம் இறைவனைச் சிறப்பாகக் காணமுடியும். அடியார் வேடத்திலும், உலோகம் கருங்கல் ஆனவற்றாலான வடிவங்களிலும், மந்திர ஒலியிலும் நாம் உணரும் வாய்ப்பைப் பெறுகிறோம். " கருங்கல்லிற் கடவுளைக் காணலாமா?" என்று இளைஞர்களிற் பலர் இன்று கேட்கிறார்கள். சடப்பொருளுக்கெல்லாம் விஞ்ஞானி சக்தி கொடுத்து இயங்கவைக்கிறானென்றால் ஏன் விக்கிரகங்களுக்கூடாக மந்திரங்களால் சக்தியை எழுப்பமுடியாது? நம்பிக்கையிலேதான் எங்கள் சமய வாழ்வு தங்கியிருக்கிறது. சமயாசாரியார்கள் விஞ்ஞானத்தையும் அறிந்தேயிருந்தார்கள். ஆனால் அதனையும் மெய்ஞ்ஞானக் கண்ணாலேயே கண்டார்கள். காணுகின்ற பொருள்களில் எல்லாம் கடவுளையே கண்டவர்கள் நமது மெய்யடியார்கள். சந்திரனைக் காணும்போது, குழந்தைக்கு விளையாட்டுப் பந்துபோலும், யானைக்குக் கவள உணவுபோலும், காதலனுக்குக் காதலியின் வதனம் போலும், விஞ்ஞானிக்கு வானத்து மண்டிலம்போலும் புறக் காட்சி மட்டும் புலப்பட, மெய்ஞ்ஞானியே அகக் கண்ணால் ஆண்டவனாகக் காண்கிறான். ஞானிகளுக்குப் பார்க்குமிடமெங்கும் பரமனே தெரிவான். அதனால் கல்லிலேயும் கடவுளைக் கண்டு காட்டினார்கள்.

ஆலயம் என்பது தொழுபவர் நெஞ்சில் மாத்திரமல்ல, உண்மையான பெருமையும் புனிதமும் கொண்டு விளங்கவேண்டும். ஒரு காலத்தில் தென்பாண்டி நாட்டிலே அரசாட்சிசெய்த பராக்கிரம பாண்டியன் தான் கட்டியெழுப்பிய தென்காசி விசுவநாதர் கோயிற் கல்வெட்டிற் பின்வருமாறு எழுதினான்.

"ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து
வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங் குவந்துஅதனை
நேராக வேயொழித் துப்புரப் பார்களை நீதியுடன்
பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே."

தான் கட்டி எழுப்பிய ஆலயத்தில் ஏதாவது பழுது ஏற்பட்டால் அதனைத் திருத்துவிப்பவர் கால்கள் தன் தலைமேலன என்று வெளியிட்டான் அரசன்.

இனி ஆலயங்கள் தோன்றிய வரலாற்றைக் கவனிப்போம். ஆதியிலே மனிதன் பகுத்தறிவின்றிக் காட்டிலே திரிந்து கொண்டு இலை தழைகளை உடுத்துக் காய் கனிகளை உண்டு வாழ்ந்தான். தனக்குதவுவனவற்றை முதலில் வணங்கினான். காலஞ் செல்லச் செல்லக் கடவுளன்பு தானே உதித்தது. இதன் பயனாக ஆலயங்கள் எழுந்தன. ஆண்டவனும் அடியார்க் கெளியனாய்க் காட்சி கொடுத்தான். பூசலார் நாயனார் என்பவர் இறைவனுக்குத் தன்னுள்ளத்திலேயே கோயில் கட்டினார். அதற்குக் குடமுழுக்குச் செய்யவும் ஒரு நாட் குறித்து விட்டார். அதே நாளிற் கழற்சிங்கன் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனும் தான் புறத்தே கட்டிய கோயிலில் சுவாமியைப் பிரதிட்டை செய்ய நிச்சயித்திருந்தான். ஆனால் எம் பெருமான் பூசலாரின் உள்ளக் கோயிலில் எழுந்தருள விரும்பிக் கழற்சிங்கனுக்குக் கனவிலே உணர்த்துகிறார்.

“ நின்றவூர்ப் பூச லன்பன்
நெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து
நாளைநாம் புகுவோம் நீஇங்கு
ஒன்றிய செயலை நாளை
ஒழிந்துபின் கொள்வாய் என்று
கொன்றைவார் சடையார் தொண்டர்
கோயில்கொண் டருளப் போந்தார்.”

கழற்சிங்கன், உயிர் தங்குவதற்கு உடம்பும் ஐம்புலன்களும் அமைந்துள்ளவாறுபோல எங்கும் நிறைந்த பரம்பொருளுக்குப் புறத்தே ஒரு கோயில் கட்டி உருவகம் செய்தான்.

“ உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.”

இந்தத் தத்துவ அடிப்படையில் தமிழகத்தில் எழுந்த கோயில்கள் எண்ணில்லாதவன. சங்கமருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரத்தில்,

“ பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும் ”

என்று குறிப்பிடப்படுகின்றது. அப்பர் சுவாமிகளால் 7ஆம் நூற்றாண்டிற் பாடப்பட்ட திருத்தாண்டகத்தில்,

“ பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில்........”

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் அநேக திருக்கோயில்கள் எழுந்தன. இவற்றில் மிகச் சிறந்த சிற்பக் கலைக்குத் தஞ்சையும் இராமேஸ்வரமும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. அங்கு அமைந்த தெய்வத் திருமேனிகள் நுண்மை வாய்ந்தவையாகும். தென்னாட்டிலுள்ள சிற்பச் செல்வத்தை வேறெங்கும் காணமுடியாது. கல்லுங் கவி சொல்லும் தன்மை இந்த ஆலயங்களிலே தான் உண்டு.

அடுத்தபடியாக நாயன்மார்கள் கண்ட திருக்கோயில்களையும் திருக்கோயில் மகிமைகளையும் கவனிப்போம்.

மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையிலிருந்து புறப்பட்டுத் தொழுத கை தலைமேற்கொண்டு துளும்பு கண்ணீரில் மூழ்கியவாறு சென்றார். ஆட்கொண்ட பெருமானுடைய திருக்காட்சியைக் காண அவாவினார். தேடிற்றிலேன், சிவன் எவ்விடத்தான், யார் கண்டனர் என்று கேட்டுக்கொண்டே சென்றார். பக்திவயப்பட்ட நிலையிலே திருக்கழுக்குன்றத்திலே அவருக்குக் காட்சி கிட்டியது. உள்ளத்திலே அமைதியை ஏற்படுத்திக் கொண்டு பாடினார்.

“ மலங்கி னேன்கண்ணில் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன் வினைக் கேட னேன் இனி
மேல் விளைவ தறிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகள்
இரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.”

இங்கேயும் ஒரு தலத்திலேயே இறைவன் காட்சி கொடுத்தமையையே எடுத்துக் காட்டினார். “ தில்லைக்கு வா” என்று எம்பெருமான் அருளியதும் ஆலயத்தின் முக்கியத்துவத்தை எமக்குக் காட்டுகிறது.

சிவானந்தத்தில் திளைத்தவர்களாக இருந்தபோதிலும் நாயன்மார்கள் ஒரே இடத்தில் இருந்தபடியே இறைவனை வணங்காமற் பல ஆலயங்களுக்கும் யாத்திரை செய்தனர். அவ்வத் தலங்கள் மீது பாடல்கள் பாடினர். நம்பியாரூரருக்கு முதலில் இறைவன் தனது இருப்பிடம் ஒரு கோயிலாகவே காட்டி மறைகிறார்.

“பொருவரும் வழக்கால் வென்ற புண்ணிய முனிவ ரேநீர்
பெருமைசேர் பதியே யாகப் பேசிய தெவ்வூர்?”

என்று நம்பியாரூரர் தன்னைத் தடுத்தாண்டுகொண்ட மறையவரைக் கேட்டபோது அவரும், ‘ஒருவரும் அறியீராகில் போதும் என்று திருவருட் டுறையேபுக்கார் கண்டவர் திகைத்து நின்றார்” என்று பெரியபுராணம் கூறுகிறது. சிறப்பாக ஆண்டவன் உறையும் இடம் ஆலயம் என்பதை இறைவனே காட்டியருளினார்.

ஞானசம்பந்தப் பெருமான் திருத்தோணிபுரக் கோபுரத்தைச் சுட்டிக்காட்டி, ‘பீடுடைய பிரமாபுர மேவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெம்மானிவ னன்றே" எனப் பாடித் தனக்குப் பால் தந்த பிரானைக் காட்டியருளியதும் ஆலயத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறதன்றோ. அதுவுமன்றி, தமிழ் நாட்டின் மூலைமுடுக்குகள் தோறும் சென்று நாளும் இன்னிசையால் அவர் தமிழ் பரப்பி மக்களின் உள்ளத்திலே சமயப் புத்துணர்ச்சியை யேற்படுத்தினார். அக்காலத்திலே ஆலயங்கள் பள்ளிகளாகவும் அன்னசாலைகளாகவும் சமூக உறவை உண்டாக்கும் பொதுத்தாபனங்களாகவும் இயங்கின. திருவீழிமிழலையிலே ஞான சம்பந்தரும் நாவுக்கரசரும் சென்றிருந்தபோது நாட்டிலே பஞ்சம் ஏற்பட்டிருந்தது. அதனை நீக்குவதற்காக இறைவனை வணங்கிப் படிக்காசு பெற்றனர். நாட்டின் பஞ்சத்தைப் போக்கினர். இவ்வாறு 7ஆம் நூற்றாண்டில் ஆலயங்கள் பெருஞ் சேவைசெய்யும் நிலையங்களாக விளங்கின. திருநாவுக்கரசர் தில்லைக்குச் சென்று வணங்கிய போது அம்பலவனின் திருக்குறிப்பைக் கண்டு எமக்குக் காட்டுகிறார்.

'ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்நான் அடியவர்க்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந்தாய்என்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே."

நாயன்மார்களுடைய வாழ்க்கையிலே ஆலயங்கள் முக்கிய இடம் பெற்றிருந்தமையாற் பதிகங்கள் தோறும் ஆலயப் பெருமையை அமைத்து அவர்கள் பாடினர். இறைவனுடைய திருக்காட்சியைக் கண்டு கும்பிடும்பேறு கிடைக்குமானால் 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே' என்றார் அப்பர். சுந்தரரும் 'மண்ணிலே வந்த பிறவியே வாலிதாம் இன்பமாம் ' என்று நினைத்தமைக்குத் தில்லைத்தரிசனமே காரணமாகும்.

இன்று நம் நாட்டுக் கோவில்களில் திருவிழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இக் காலங்களில் விசேஷ பூசை நடப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அச் சந்தர்ப்பத்தில் இறைவனை வழிபடப் பக்தர்களை வரவழைக்கவும் சொற்பொழிவுகளைக் கேட்க வைக்கவும் திருமுறைகளை உணரவைக்கவும் திருவிழாக்கள் பயன்படவேண்டும். விசேட பூசைகள் அவ்வப்போது நடத்துவது ஒவ்வொரு கோயிலுக்கும் மிக அவசியம். அதனால் பூசிக்கப்படும் தேவதைக்குச் சைதன்யம் அதிகப்படும் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. உத்ஸவம் என்றால் சுகத்தைக் கொடுப்பது என்பது பொருள். உத்ஸவ காலங்களில் அதில் ஈடுபடும் ஒவ்வொருவருக்கும் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. ஆலயங்கள் எல்லாம் திருவிழாக்கள் காரணமாகச் சீரும் சிறப்பும் பெற வேண்டும்.

அழகான அமைப்புக்களோடு அமைந்த ஆயிரம் ஆயிரம் கோவில்கள் நம் நாட்டிற் காட்சியளித்தால் மட்டும் போதாது. அவை தொழுபவர் நெஞ்சில் உண்மையான தூய்மையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆலயத்தில் நிற்கின்ற நேரம் உயிருக்கு ஊதியம் தேடுகின்ற நேரமாகும்.

- 16ம் பக்கம் பார்க்க

## நான் + நீ

என் வாழ்க்கையைப் போலவே
வெறிச்சோடிப் போன
வீதி!.......
அதன் ஓர் ஓரத்தில் நான்.........
நீ போகிறாய்
என்னைக் கடந்து............
என்னை
ஓர் புதியவனைப் போல்
பார்த்துவிட்டு
போகிறாய்!.......
என் அனுமதியின்றி
என் உதடுகள்
உன்னை அழைத்தன......
நீ திரும்பினாய்
என்னை நோக்கி......
மெதுவாக
நெருங்கினாய்.....
என் அருகில்
ஏன் இந்த மாற்றம்?......
என்றாய்......
மாற்றம் வெளியில்தான்
என்றேன்......
எதற்காகவோ காத்திருப்பது
போல் தெரிகிறது
என்றாய்
காத்திருப்பது தெரிந்த
உனக்கு......
காத்திருப்பது எதற்காக
என்று தெரியவில்லையா?
என்றேன்.......
நீ என் கரங்களை பற்றிக்கொண்டாய்......
நான் விழித்துக் கொண்டேன்!.....

-முகமட் அஸ்மி-


## இலவச சைவத் தமிழ் வகுப்புக்கள்

ஆதி அருள் நெறி மன்ற ஆதரவில் தற்போது 3 இடங்களில் நடைபெறுகின்றது.

1. லாரன்ஸ் பேர்ச்மவுண்ட் சந்திப்பில்
2. 1200 எல்ஸ்மெயர் வீதி அறை இல. B21 இல்,
3. மக்லீவன் பெனிகில் சந்திப்பில்

இந்த வகுப்பில் சேர்ந்து படிக்க விரும்புவோர் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யலாம்.

போதனாசிரியர்:- புலவர் ஈழத்துச் சிவானந்தன்

தொலைபேசி:- (416) 289-4043




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகரை நானும் கண்டேன் ஐயா

- புலவர். ஈழத்துச் சிவானந்தன்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலே, யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமைந்து விளங்கும் சிவதொண்டன் நிலையத்துக்குள் தாகக்காகமாய் தவிப்படைந்த காளைமாடு தண்ணீருக்குள் தலைவைத்த மாதிரியாய் நுழைகிறேன். முன் இருப்பில் உள்ள அறைக்குள் ஒருவர் இருந்தது தெரிந்தது. நான் அவரை காண்பதற்கு முன் அவர் என்னைக் கண்டிருக்க வேண்டும், வாருங்கள் என்ற வாக்கியம் வானலையாய் காதுக்குள் குளிர்மை சேர்ந்தது. வணக்கம் என்றபடி உள்ளே போனேன்.

எங்களூர் அரசினர் மகாவித்தியாலயத்தில் அதிபராய் இருந்த திரு சச்சிதானந்தம் அவர்கள் சத்-சித்-ஆனந்தமாய் திருநீற்றுப் பொலிவுடன் முறுவல் பூத்த முகத்துடன் நின்றார். இருக்கச் சொன்னார். இருக்கமனம் ஏவவில்லை. அவரும் நின்றார். இவனும் நின்றான். என்ன விசேடம்? என்றார். தம்பண்ணனைக் காணவேண்டும். நிற்கிறாரா? என்று கேட்டான். நிற்கவில்லை. இருக்கிறார். தியானத்தில் இருக்கிறார். சிறிதுநேரம் செல்லும் என்றார். ஆனந்தச்சச்சி, ஆசிரியராய் அதிபராய் இருந்த காலத்தில் இல்லாத ஆனந்தம் சச்சியரில் பொங்கிப் பூரித்துப் பிரகாசித்தது. இது இப்ப முடிந்த காரியமாய் இவனுக்குப் பட்டது. அவருடைய முன்னைய வாழ்க்கை எப்பவோ முடிந்த காரியமாய் இருந்திருக்கலாம்.

சிவதொண்டன் இதழுக்கு ஏதாவது எழுதுங்களேன் என்றார் சச்சி. என்னத்தை எழுதலாம் என்று கேட்டான் இவன். அறிவுக்கட்டுரை வேண்டாம், ஆய்வுக்கட்டுரையும் வேண்டாம் என்றார் அவர். பின் என்னதான் எழுதுவது? சிறுகதையா நாவலா? புதுக்கவிதையா? சச்சியர் சிரித்தார், இவன் கேட்டதும் சிரிக்கட்டும் என்றுதான். சிவதொண்டனின் பொருள் அடக்கம் இவனுக்கும் தெரிந்ததுதான். அனுபவம்! அனுபவம்! அனுபவம்! என்றார் சச்சி. ஓ! ஆன்மீகத்தில் அனுபவம் தான் ஆதிபகவனை அனுகவைக்கும். அனுபவித்து ஆனந்த வெள்ளத்தில் திளைக்க வைக்கும் திருவருள் கூட்டினால் எழுதி அனுப்புகிறேன் என்றான்.

நேர நகர்வில் தம்பண்ணனும் தியானத்தை முடித்து வந்து நின்றார். தம்பர் எங்கள் ஊரவர். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பண்டகசாலை பொறுப்பாளர் (s.K) ஆமிலிய நட்சத்திரத்தன்று தம்பரை பண்டகசாலையில் பார்க்க முடியாது. ஏ.சி.சி.டி. வருவதாய் இருந்தாலும் தம்பர் சிவதொண்டன் நிலையத்திற்கே சென்று விடுவார். கூட்டுறவுத் திணைக்களத்தில் ஆமிலியத்தன்று தம்பருக்கு விதி விலக்கு என்பது எழுதாவிதி.

சிவதொண்டனுக்குள் இவன் போனது தம்பரைக் காணவன்று. சும்மாதான் போனான். சச்சியரின் கேள்விக்கு வாயில் வந்த பதிலே தம்பண்ணன் என்பது. மாலை மயங்கி பொழுது காரிக்கத் தொடங்கியதும் இவன் சிவதொண்டன் நிலையத்திலிருந்து வெளியேறி வீதியால் போய் கொண்டிருந்தான் சச்சியர் சொன்ன அனுபவம் ஆன்மீகத்தளத்தில் தனக்கு ஏற்பட்டதா? என்ற விசாரணை மனதுள் எழுந்தது. ஆன்மீகம் பற்றி பின்பு யோசிக்கலாம். லௌகீகமாக ஏதாவது? என்று எண்ணிப்பார்த்தான். யோக சுவாமிகளை தான் கண்டகாலங்களும் அவர்போக்கும் போதனைகளும் உள்ளங்கை நெல்லிக்கனியாய் இல்லை உள்ளங்கை உருளைக்கிழங்காய் திரண்டு உருண்டது.

இவன் தந்தையாரும் அவர் நண்பருமாகக் கொழும்புத்துறைக் கென்று வெளிக்கிட்டார்கள். இவனையும் கூட்டிக்கொண்டு கொழும்புத்துறை ஆச்சிரமம் என்ற ஒரு குடிசைக்குப் போனார்கள். குடிசை வாசலில் வாசனைப் புகை சுவாசத்திற்குச் சுகமாகவும், இதயத்திற்கு இனிமையாகவும் ஈர்த்து இழுக்கும் இயல்பினதாய் கமழ்ந்து கொண்டிருந்தது. உள்ளே ஒருபக்கமாய் பலர் கூடி அமைதியாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிர்ப்பக்கத்தில் பால் வெள்ளைநிறத்து தாடியும், பழச்சுவை நீர்மையை நீட்டும் நீள் விழிப்பார்வையுமாய் முனிவர் கோலத்தில்- சிவனார் இருந்ததை இருந்து காட்டிய யோகசுவாமிகள். அவருக்கு இடதுபுறமாய் மூன்று முறுக்கேறிய இளந்தாரிகள் கையில் ஒவ்வொரு புத்தகத்தோடு காட்சிக்கு எளிமையாய் இருந்தார்கள்.

புகுவார் அவர்பின்பு புகுந்த நாங்கள் எங்களுக்காய் தெரிந்த நிலப்பரப்பில் உட்கார்ந்தோம். சுவாமிகள் வரிசைக்கிரமமாய் வாலிபர்களை வாசிக்கச் சொன்னார்கள். முதல் இளைஞன் புத்தகத்தை விரித்து வாசித்தான். அது திருக்குறளாய் ஒலித்தது. இது முடிய இரண்டாமவன் தான் வைத்திருந்த புத்தகத்தைப் புரட்டிப் படித்தான். அது பைபிள், இந்த வாசிப்பின்போது என் தந்தையார் உட்பட நால்வர் தலைகுனிந்தபடி இருந்தனர். ஏனப்பா? குனிந்திருக்கிறீர்கள். நிமிர்ந்து கேளுங்கோ, யேசு ஒரு மகான். கடவுளின் குழந்தை செய்த போதனைகள், நமது செவிக்கும் தேவையானவை என்றார். மூன்றாவது இளைஞன் தனது புத்தகத்தைத் தட்டி வாசித்தான். அதுகுரான். அல்லாவைப்பற்றியும் நாம் அறிந்திருக்க வேண்டும் அவருடைய வாக்குகள் அமுத வாக்குகள் என்றார் யோக சுவாமிகள்.

மாலை நேரங்களில் இந்த மூன்று இளைஞர்களும் திருக்குறள்-பைபிள்-குரான் ஆகியவற்றை வாசிக்க சுவாமிகள் இலகு தமிழில் அவற்றிற்கு விளக்கமளிப்பார்கள் என்று சிலர் சொன்னார்கள்.

(தொடரும்......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே சிந்தியுங்கள்

திருமதி. வசந்தா நடராசன் BA

மனித இனத்தின் ஒரு பிரிவான பெண்மை ஆரம்ப காலந்தொட்டு இன்றுவரை பல்வேறு விதமான தாழ்வு மனப்பான்மைகளாலும், அடிமைத்தனங்களாலும் பின்னப்பட்டு அல்லலுறுகின்றது. மதமும், இலக்கியங்களும், சம்பிரதாய பூர்வமான பழக்கவழக்கங்களும் பெண்மையின் மன உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதிலும், அக்கறை காட்டியுள்ளன.

ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் புரிந்து விட்டுக்கொடுத்து, இருவரும் ஆளுமையுடன் திட்டங்களைத் தீட்டி குடும்பம் என்னும் கதம்பம் மணம் வீச உதவவேண்டும். புலம் பெயர்ந்த நாடுகளில் ஆணைப்போல, பெண்ணும் வெளியே சென்று, உழைக்கவேண்டிய சூழ் நிலை காணப்படுகின்றது. தவிரவும் வீட்டிலேசு குழந்தைகளைப் பராமரித்து வழிநடத்துவது, வீட்டுப்பொறுப்பு சமையல் வேலைகள் எனப் பலவேறு விதமான கடமைகளை ஏற்க வேண்டியுள்ளது. தாயகத்திலே காணப்பட்ட சூழ்நிலையிலிருந்து, புலம் பெயர்ந்த நாடுகளில் பெண்ணின் பொறுப்பு பல மன அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது. வேலை செய்யும் இடத்திலும், வாழும் மாறுபட்ட சூழ்நிலையிலும் ஏற்படும். இந்த மன அழுத்தம் நாளடைவில் பெண்ணின் ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் அழிக்கும் நிலையை ஏற்படுத்துகின்றது.

வீட்டு வேலைகளைச் செய்கின்ற பெண்கள் அன்றாட மன ஓய்ச்சலை தவிர்ப்பதென்பது, பெரும்பாலும் அவர்களைப் பொறுத்தே உள்ளது. அலுவலக வேலையைப் போன்று வீட்டு வேலைக்கு விடுமுறை கிடையாது. எதிர்பார்ப்புக்கள் கிடையாது. திருப்தி, தியாகம் போன்ற உணர்ச்சிகளின் அடிப்படையிலேயே, குடும்பத்தைப் பல்கலைக்கழகமாகப் பெண் மாற்றுகின்றாள்.

வீட்டுப் பொறுப்புகளை எளிமையாகவும், இலகுவாகவும் ஒரு பெண் ஆக்கிக் கொள்ளமுடியும். தேவையற்ற நெருக்கடிகள் ஏற்படும் போது, பிள்ளைகள் மீதும், கணவன் மீதும் ஆத்திரம் ஏற்படுகின்றது. இது வாக்குவாதத்தில் முடிவடைவதால், நேரமும் மன அமைதியின்மையும் ஏற்பட்டு விபரீத முடிவுகள் ஏற்பட ஆரம்பமாக அமைந்து விடுகின்றது. இதனை எவ்வாறு ஒரு பெண் தவிர்க்க முடியும்? மறுநாள் சமையலுக்குத் தேவையான காய்கறி போன்றவற்றை முதல்இரவு சிறிது நேரத்தை ஒதுக்கி, தயார் நிலையில் எடுத்து வைக்கலாம். உடைகளை அழுத்தி (iron) வைக்கலாம். இவை மறுநாள் காலையில் சிறிது ஓய்வாகக் கருமங்களை ஆற்றத் துணைபுரியும்.

புலம் பெயர்ந்த நாட்டின் சிலவசதிகள், சிலவேளைகளில் தேவையற்ற மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. குறிப்பாகத் தொலைபேசியைக் குறிப்பிட முடியும். பொறுப்பற்ற முறையில் தொலைபேசியில் பல மணிநேரம் பேசிக் கழிக்கும் பலரை அநுபவத்தில் காணமுடியும். எனவே, தொலைபேசியில் பேசும்போது, நேரத்தை நீடிக்காது, ரத்தினச் சுருக்கமாகப் பேசி முடித்து, ஓய்வு நேரத்தைச் சேமிக்க முடியும்.

பெண், தான் செய்கின்ற ஒவ்வொரு வேலையிலும் ஒரு கிரமத்தை, நெறியை வரை முறைப்படுத்தக் கற்றுக் கொண்டால் வாழ்க்கை சலசலப்பின்றி அமைதியாகச் செல்லமுடியும். இன்று பெண்கள் பல பதவிப் பொறுப்புக்களையும், பணப் பொறுப்புக்களையும் ஏற்கும் நிலைக்கு சம அந்தஸ்து பெற்று வருகின்றார்கள். இவ்வாறே நேரத்தையும் நிர்வகிக்க கட்டுப்படுத்தப் (time-management) பழக வேண்டும். ஒரு பெண்ணுக்குத் தேவையான மிகப் பெரிய பொறுப்பு இதுவேயாகும். வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் நேரத்தை தன்வசப்படுத்தும் பொறுப்பு மிகவும் இன்றியமையாதது. நம் பெண்களில் பலர், இத்திறமை அற்றவர்களாகவே காணப்படுகிறார்கள். எனவே, பெண்களே! சிந்தியுங்கள்.

ஆண், பெண் இருபாலாருடைய உடற் தோற்றமும் வேறுவகைப்பட்டது. இவ்வாறே பெண்களுடைய உடல்வளர்ச்சி, சிந்தனை மனோபாவம் என்பனவும் வேறுவகைப்பட்டே காணப்படுகின்றன. ஆண் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பையும்: பெண், குழந்தை, அன்பு, ஒழுக்கம் இவற்றைக் காக்கும் பொறுப்பையும் ஏற்கின்றனர். இது இறைவன் படைப்பிலே காணப்படும் நிலையாகும். நடைமுறையோடு வாழ்வோடு இணைந்து சிந்தித்தால், ஆண் காப்பாளராகவும் பெண் வளர்ப்பாளராகவும் விளங்குவதைக் காணமுடியும். இந்த அடிப்படையை உணர்ந்த இல்லறம் நல்லறமாக ஒளிர்வதும் நிச்சயமான உண்மை. இதே நேரம் ஒரு ஆணிடம் தனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெறுகின்ற குணம், தேடிப் போகின்ற குணம் இயற்கையிலேயே காணப்படுகின்றது. இவற்றோடு எத்தனை படித்த பெண்ணாக இருந்தாலும் பெரிய பதவி வகிக்கும் பெண்ணாக இருந்தாலும்: தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே ஆண்மகன் விரும்புகின்றான். மதமும், இலக்கியங்களும் ஆண்மகனை ஆளுமையும் அதிகாரமும், உறுதியும் கொண்ட பாத்திரமாக உருவாக்கி நடைமுறையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுவடையச் செய்தன.

உலகெங்கிலும் உள்ள பெண்களில் பெரும்பாலானோர் தமக்கு வேண்டியதைக் கேட்கத் தயங்குகின்றனர். தனது கணவன் தன்னைப் புரிந்து தேவைகளைப் பூர்த்தி செய்வான் என எதிர்பார்க்கின்றனர். சிலவேளைகளில் இந்த எண்ணம் ஏமாற்றமாகி உள்ளத்தை நலிவடையச் செய்கின்றது. தனது தேவைகளை மற்றவர்கள் புரிந்து கொள்வார்கள் என நினைப்பது தற்காலத்தில் தவறான அணுகு முறையாகும்.

பெண்கள் பல மாற்றங்களை விரும்புகிறார்கள். பெண்களுடைய சிந்தனையில் மாற்றம் ஏற்படவேண்டும். புரிந்துணர்வுடன் தனது தேவைகளைத் தானே நிறைவேற்ற வேண்டும். கணவன், மனைவி இருவரும் கலந்துரையாடி, சுமுகமான முறையில் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவேற்ற வேண்டும். சிலவேளைகளில் கணவன் அசட்டையாகவோ வேலைப்பளு காரணமாகவோ, மனைவியின் விருப்பு, வெறுப்புக்களை மறக்கலாம். இவ்வேளைகளில் புரிந்துணர்வுடன், தமது விருப்பு, வெறுப்புக்களை மனம் விட்டுப் பேசி முடிவு காணவேண்டும்.

இருமனம் இணைந்த திருமணங்களில் நிர்ப்பந்தத்திற்கோ, கட்டாயத்திற்கோ, இடமின்றி, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஆண், பெண் இருவரும் நடக்க முயற்சிக்க வேண்டும். விட்டுக் கொடுக்காத சூழ்நிலையில், மேலைத்தேய வாழ்க்கைமுறையைப் பின்பற்றி திருமணமான பெண்கள் இன்று தனித்து வாழ (single mother) வேண்டிய நிலை உருவாகின்றது. இதனால், வாழ்க்கை, குடும்பம் என்பவற்றின் தார்ப்பரியம் நிலைமாறி, குழந்தைகளும் எதிர்காலத்தில் கட்டுப்பாடற்ற வாழ்க்கையை பின்பற்ற வழிவகுக்கின்றது.

தமிழர்கள் பின்பற்றும் மதக் கொள்கைகளும், கலாச்சாரமும், பண்பாடும், இருமனம் கலந்து இல்லறம் நல்லறமாக வாழ வகை செய்துள்ளது. வாழ்க்கை என்பது அறம் என்பதை ஆண், பெண் இருபாலாரும் உணர்ந்து குடும்ப தர்மம் சிறக்கத் துணைபுரிய வேண்டும்.

❀ ❀ ❀

> நமக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. எல்லாம் தெரிந்திருக்கவும் முடியாது. எனக்கு இதுதான் தெரியும். இது தெரியாது என்று சொல்லிக்கொண்டால் அது அறியாமையாகாது. அது உண்மையான அறிவுடைமையே ஆகும். தனக்குத் தெரியாததைத் தெரிந்ததாகக் கூறிக்கொள்வது இருக்கிறதே அதுதான் மிகப் பெரிய அறியாமை!
>
> – வித்வான் வே.லட்சுமணன்.

# மனித உடல்களே தேவர்களின் வாழ்விடம் உடல்களுக்கு அளிப்பதெல்லாம் தேவர்களுக்கே சமர்ப்பணம்

-சித்ரா மணாளன் –

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து"

என்கிறார் வள்ளுவர்.

அதாவது வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையுடையது என்ற குறளுக்குத் துணையாகவே

"இல்லார்க்கும் தமிழில் நல்ல வல்லார்க்கும், இல்லையெனாது எடுத்துச் செல்வீர் என ஈவதே வாழ்க்கையாகும" என்று குறளோவியரும் வலியுறுத்தக் காண்கின்றோம்.

ஆனால் நாம் எதைப் படைத்தாலும் அதை அந்த ஈசனுக்கே படைக்கவேண்டும். நாம் படைக்கும் பதார்த்தங்களை ஈசனின் உலகத்திற்கு தேவர்கள் எடுத்துச் செல்வார்கள் என்ற நமது சமய நம்பிக்கையுடனயே வாழ்கின்றோம். இந்த நம்பிக்கையை ஏற்காதவர்களின் வாதம் எழுகின்ற போது மெஞ்ஞான அஞ்ஞான கருத்து மோதல் மேலோங்கி அது நாஸ்த்தீகம், ஆஸ்த்தீகம் என்று இரு பெரும் பிரிவுகளாகின்றன.

இந்த இருபெரும் பிரிவுகளும் இந்து சமயத்தின் தோற்றுவாயான இந்தியத் திருநாட்டில் இணைகின்ற சாத்தியக் கூறுகள் இல்லை எனலாம். ஏனெனில் அங்கே வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களை அண்மிக்கும் வேளையில் ஆலய மணி ஓசைகளின் ஒலிகளை விட பசியால் வாடிய பரிதாப மனிதர்களின் பிச்சை ஓசைகளே நெஞ்சையும் கரையவைக்கும். ஆனால் ஆலயத்தினுள்ளே பாலும் தேனும் தெய்வீக உருவங்களைத் தழுவி கட்டாந்தரையுடன் சங்கமாகின்ற காட்சியையும் நாம் காணத் தவறுவதில்லை.

தீர்த்தமாக ஓடுகின்ற பாலையும் இளநீரையும் பதப்படுத்தினால் பாரதநாட்டின் பிச்சை ஒலிகளும் பசியால் வாடி உணர்விழந்து ஈக்களுக்கே உணவாகிக் கொண்டிருக்கும் எதியோப்பிய மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்களே! என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் தோன்றுமாயின் அது நியாயமானதே!

மக்களின் பசியும் பட்டினியும் முக்கியமல்ல. எவ்வளவு பாலும் தேனும் இளநீரும் நமது இறைவனுக்கு ஊற்றி அபிஷேகம் செய்கின்றோமோ அவ்வளவுக்கு நமது நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மழையும் அளவான வெய்யிலும் காற்றும் நல்ல விளைச்சலும் கிடைக்கும். பசுமை நிறைந்த வளமான வாழ்க்கை மலரும் என்று யாரும் எண்ணுவார்களாயின் அது நமது சமயக்கருத்திற்கு முற்றிலும் முரணானதே!

ஏனெனில் நமக்குத் தெரியாத பார்க்கமுடியாத தேவர்களான காற்று, நீர், நெருப்பு என்பவர்கள் நமது உடலுக்குள்ளேயே வாழ்கின்றார்கள். இந்த மூன்று தேவர்களும் நம்மை இயக்கவில்லையாயின் நாம் மனிதர்களல்ல வெறும் சடம். எனவே தான் பசியாலும் பட்டினியாலும் வாடும் மக்களுக்கு நாம் கொடுக்கும் உணவு தேவர்களின் வாழ்வுக்குக் கொடுக்கும் உணவு இதனாலேயே அவர்கள் திருப்தியடைகின்றார்கள். அதனால் நாமும் திருப்தியடைய முடியும் என்கிறது கீதை.

" யாகங்களால் தேவர்கள் மகிழ்ந்து உங்களை மகிழ்விப்பர் இவ்வாறு ஒருவரை ஒருவர் மகிழ்ந்து எல்லோரும் நலம் பெறுவீராக" என்ற ப.கீ.அத்:3:11 ன் கருத்தை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். மனிதர்களின் பசியையும் பட்டினியையும் போக்கினால் அதுவே இறைவனின் பசியைப் போக்கிய பணியாகும். இதையே மக்கள் சேவையே மகேசன் சேவை என்றார்கள் ஞானிகள்.

எனவே மக்கள் சேவைக்காக முனைப்புக் கொண்டிருக்கும் சகல பொதுஸ்தாபனங்களும் வறுமை நிறைந்த நாடுகளில் தாங்கள் பணிகளைச் செய்யவேண்டும். திருநாவுக்கரசு நாயனார் காட்டிய வழியில் எல்லோரும் தொண்டர்களாகப் புறப்படவேண்டும். சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த நாவுக்கரசரைக் காப்பாற்றுவதற்காக தன் வாழ்வையே தியாகம் செய்த திலகவதியாரைப் போல் தமிழ் ஈழப்போரில் தங்கள் பெற்றோர்களையும் சகோதரங்களையும் மரணதேவனிடம் களவுகொடுத்து விட்ட நாவுக்கரசர்களைக் காப்பாற்ற அதிக திலகவதியார்கள் புறப்படவேண்டும். நமது சொத்துக்களையும் சுகங்களையும் அந்த மண்ணின் மைந்தர்களுக்கே படைக்கவேண்டும். இதன் மூலமே தேவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்.

" யாகங்களால் திருப்தியடைந்து பல்வேறு வாழ்க்கைத் தேவைப் பொருட்களின் அதிகாரிகளான தேவர்கள் மனிதர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் அளிக்கின்றனர். இவற்றைப் பதிலுக்கு அவர்களுக்குப் படைக்காமல் அனுபவிப்பவன் திருடனே!

ப.கீ.அத்:3:12 ன் உபதேசம் நாம் எதைச் செய்தாலும் அது மற்றவர்களைத் திருப்த்திப் படுத்துவதாகவே அமையவேண்டும் என்ற உண்மையை உணர்த்தக் காண்கிறோம்.

' பெரிய மனிதன் எத்தகைய செயல்ளைச் செய்கின்றானோ அவனடிச் சுவட்டைப் பின்பற்றி பிறரும் அதையே செய்கின்றனர். தன் செயல்களால் எத்தரத்தை அவன் உவமை அமைத்துக் காட்டுகின்றானோ அதையே உலகம் முழுவதும் பின்பற்றுகின்றது' என்ற

ப.கீ.அத்: 3:21 ன் கருத்திற்கு உதாரணமாக திகழ்ந்தவர் நமது திருநாவுக்கரசு நாயனார். அவருடைய வழிகாட்டலின் படியே அப்பூதியடிகள் மக்களுக்கு சேவை செய்தார். அவர் அமைத்த தர்ம ஸ்தாபனங்கள் மக்களின் துயர் போக்கியது. அதன் பலனாகத்தான் பாம்பு தீண்டி இறந்த தன் மகனை மீளவும் உயிருடன் பெற்றார். இதையே தான் நம்மவர்கள் தர்மம் தலைகாக்கும் என்றார்கள்.

அதே போன்று போர்ச்சூழலில் சிக்கித் தவிக்கும் தமிழ் ஈழ மக்களின் துயர் போக்க ஆயிரம் ஆயிரம் அப்பூதியடிகள் உருவாகவேண்டும். அந்த அபாக்கியசாலிகளைப் பிரச்சனையிலிருந்து மீண்டெடுக்க நாம் ஒவ்வொருவரும் செய்யும் தர்மம் தான் நம்மைக் காக்கும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படவேண்டும்.

நாம் எதைச் செய்தாலும் நமது நாட்டில் அல்லல்படும் மக்களுக்காகவே செய்யவேண்டும். ஒரு நேர உணவைக் கூட காணமுடியாது தவிக்கும் நமது தாயக உடன் பிறப்புக்களை நாம் தினமும் நினைத்திடவேண்டும். ருசியான உணவகத்தைத் தேடி நாமும் அலைந்திடும் அலைந்திடும் நிலையினை நாம் இங்கு மறந்திடவேண்டும்.

நமது புலனிபத்திற்காக நாம் செய்யும் செயல்கள் நம்மில் பலரை நோயாளர்களாக மாற்றியுள்ளமையை அண்மைக்கால மாரடைப்பு மரண புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே தான் சுயபுலனின்பத்திற்காக உணவு தயாரிப்பவன் பாவம் செய்பவன் என்கிறது கீதை.

" யாகத்திற்காக முதலில் படைக்கப்பட்ட உணவை உண்பதால் பக்தர்கள் எல்லாவிதமான பாவங்களிலிருந்தும் விடுபடுகின்றார்கள், சுயப்புலனின்பத்திற்காக உணவு தயாரிப்பவர்களோ பாவத்தை உண்கிறார்கள்" என்ற

ப.கீ.அத்:3:13 ன் உபதேசம் அன்னிய நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள நம்மவர்க்கு மிகவும் பயனைத்தரும் உபதேசம். எனவே நமது நாட்டில் நம்மவர்களின் பசியையும் பட்டினியையும் தீர்க்கும் வகையில் நாம் நம்மையே ஈகை செய்யவேண்டும். இதன் மூலம் மனிதர்கள் மட்டுமல்லாது நம்மைக்காத்திடும் தேவர்களும் இன்புற்றிருப்பார்கள். ஏனெனில் "மனித உடல் தான் தேவர்களின் வாழ்விடம். எனவே மனித உடலுக்குச் செய்கின்ற அனைத்தும் தேவர்களுக்கே சமர்ப்பணம். இதுவே இந்து சமயத்தின் உண்மைத் தத்துவம். புரிந்து வாழ்வோம். நலம் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை முன் இதழ்த் தொடர்ச்சி

# இருப்பின் அடையாளம் எது? அடையாளத்தின் இருப்பு எது?

மு.பொன்னம்பலம்

சிவசாமி அவ்விடத்தை விட்டு நகர்ந்தான்.

அவன் இறந்து போனதற்கு இரண்டு நாளைக்கு பிறகு, அவன் படுத்திருந்த இடத்தில் அவன் சாவதற்குக் காரணமாய் இருந்த அந்தச் சிங்களப் பிச்சைக்காரன் நித்திரை செய்வதைக் கண்டு, அவன் கழுத்தைச் சிவசாமி ஆவேசங் கொண்டு பலதடவை நெரித்தான். அலறிக் கொண்டு விழித்தெழுந்த சிங்களப் பிச்சைக்காரன், தான் பயங்கரக் கனவு கண்டதாக நினைத்தான். அதன் பின்னர் அங்கு படுப்பதே இல்லை!

இப்போது சிவசாமிக்கு ஆறுதல் தரக்கூடியதும் ஆனந்தம் தரக்கூடியதுமான ஒரே ஒரு விஷயம் போக்குவரத்து ஒன்றுதான். காலோயும் மட்டும் நடந்தும் இடைக்கிடை வாகனத்தில் நெரிபட்டும் போக்குவரத்துச் செய்த சிவசாமிக்கு இப்போ நினைத்தவுடன் நினைத்த இடத்துக்கு காற்றாய் பறந்து போய் வரக்கூடிய ஆற்றல் எவ்வாறு சித்தித்தது என்பது பெரும் புரியாத புதிராக இருந்தது. பின்னர் அது தன் இயல்பென நினைத்துக் கொண்டான்.

அவன் இப்போ அடிக்கடி தீவுப்பகுதிக்குப் போய் வந்தான்.

அவன் தீவுக்குப் போனதும் முதன் முதலாகச் செய்த வேலை தான் வாடிக்கையாகக் கள்ளுக் குடித்து வந்த ராசன் வீட்டுக்குப் போனது தான். "வாய்" நிறைய கொழும்புக் கதைகளோடு போயிருந்தான். ஆனால் அங்கே ஒருவரும் அவனைக் "கண்டு" கொண்டதாய் இல்லை. பின்னர் அங்கிருந்து வழக்கமாக பீடி வாங்கும் சூரி கடைக்குப் போனான். அங்கும் இதே கதைதான்.

இவர்களுக்கெல்லாம் கண் குருடாகிப் போச்சா?

சிவசாமிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

அப்போது தான் தீவுப் பகுதிக் கோயிலொன்றுக்கு பூசகராக இருந்து இடையில் விட்டிட்டு ஓடி யாழ்ப்பாணம் போன சண்முகநாதக் குருக்கள் சிவசாமிக்கு எதிரே வந்து கொண்டிருந்தார், நோய்க்கு வைத்தியம் செய்யப் போவதாக போனவர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போய் அங்கிருந்து தீவுக் கோயில்களுக்குத் திருவிழாச் செய்யப் போவதாக காசு திரட்டிக் கொண்டு போனவர்...... திரும்பவே இல்லை. சிவசாமிக்கு இவை நினைவில் ஓடின.

" என்ன ஐயா, இந்தப் பக்கத்தால? " சிவசாமி தன்னோடு கதைக்க ஒருவர் கிடைத்த உற்சாகத்தில் அவரை ஆரவாரமாக வரவேற்றான்.

' நான் இடைக்கிடை இந்தப் பக்கத்தால வாறனான்...... நீதான் என்னைக் காணேல்ல. அப்ப நீ இங்க உயிரோட இருந்தனியாக்கும். அதுதான் காரணமாய் இருக்கும். '

' நீங்க விபத்தில் செத்துப் போனதை நான் பேப்பரில் பார்த்தனான் ஐயா......'

' அது சரி, நீ எப்ப கூப்பனை குடுத்திற்று வந்தனீ?'

' போன மாசந்தான். ஒரு சிங்கள பரதேசி அடி வயித்தில உதைஞ்ச போட்டான். பிறகு எனக்கு என்ன நடந்ததெண்டு தெரியாது........ கொஞ்ச நேரத்தால பாத்தா என்ர உடம்பைச் சுத்தியண்டு பொலிசும் ஆக்களுமா... நான் எவ்வளவோ குளறிப் பாத்தும் ஒருவனுக்கும் என்னைக் கண்ணுக்குத் தெரியேல்ல.... இவங்கள் பூமியில உயிரோட இருக்கிற எண்ட பேர்தான் எல்லாரும் சுத்தக் குருடுகள். எங்களை போல அவங்களையும் பார்த்து எங்களையும் பார்க்கிற வெளிச்சம் கிடையாது...."

' அது தான் எனக்கும் உள்ள பிரச்சினை. கொஞ்ச சாமான்களை மறைச்சு வைச்சிற்று வந்தனான். அதை என்ர வீட்டாருக்கு சொல்லுவமெண்டா முடியாமல் இருக்கு. என்ர வீட்டாருக்கு என்னை தெரியேல்ல..... அதைப் பாக்கத்தான் இஞ்சால அடிக்கடி வாறனான்.

'அது சரி யாழ்ப்பாணச் சனத்துக்கு நடந்ததைப் பாத்தியளோ.... எல்லாம் என்னமாதிரி நடந்து முடியுது......"

' இப்படி வருமெண்டு ஆரு கண்டது? பெரும்பாவம்! வீடு வாசல் எண்டு வாழ்ந்த சனம். இப்பரோட்டு ரோட்டாக குந்தி எழும்புது....."

"எச்சில் கையால காகம் கலைக்காத யாழ்ப்பாணத்தாருக்கு, ஏழையளுக்க குடுத்தறியாத யாழ்ப்பாணத்தாருக்கு இதைவிட வேறென்ன வரும்? எங்கட அண்ணர் செட்டி மாதிரி இருக்க நான் சாப்பாடில்லாமல் ரோட்டில பிச்சை எடுத்து செத்தன். அப்பிடிப்பட்ட எங்களுக்கு இதைவிட வேறென்ன வரும்? "

" எண்டாலும் இப்படி யாழ்ப்பாணத்து சனத்தின்ர வயித்தில ஆரும் ஏறிமிதிக்கக் கூடாது...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைதான் ஐயா, ஆரெண்டா என்ன, வயித்தில அடிச்சவன் வாழமாட்டான். என்ர வயித்தில உதைஞ்சவன் இப்ப குடி எழும்பிப் போனான்! அவன் இப்ப அந்த இடத்தில படுக்கறதும் இல்ல. எங்கேயும் படுக்கவும் பயந்து நடுங்கி நடுங்கி செத்துக் கொண்டிருக்கிறான். ஓமோம் எல்லாருக்கும் இதுதான் மாறி மாறி நடக்கப் போகுது. ஆண்டவன் தீர்ப்பெண்டு ஒண்டு இருக்கல்லே.....

" இப்ப இலங்கை எங்கையும் யாழ்ப்பாணமாய் மாறிப்போச்சு. இந்தப் போர் வந்தாலும் வந்துது பிள்ளையளை பறி குடுத்த தாய்மாரின் அழுகைதான் எங்கையும்..... சரி சரி பசிக்குமாப் போல் இருக்கு வா கோயில் பக்கம் போவம். இண்டைக்கு பிரதோச விரதம். சண்முகம் பொங்கி படைச்செண்டு நிப்பான். ஒரு பிடி பிடிப்பம்....."

" ஐயா முந்தி எங்கட அம்மா, படைப்பு சோறுகளை சாப்பிடாதையடா, கண்ட ஆவியள் வந்து உமிஞ்சிருக்குமடா எண்டு சொன்னா நான் நம்பிறேல்ல. இப்பதான் அதில எவ்வளவு உண்மை இருக்கெண்டு புரியுது....."

குருக்கள் ஐயா கெக்களம் கொட்டிச் சிரிக்கிறார்.

சோம்பல் முறித்துக் கொண்டு கிடந்த மந்திரி மீண்டும் கண்ணையர்ந்து கனவு கண்டுவிட்டு விழித்துக் கொண்டதுபோல், விழித்தது.

வானொலி போரில் இறந்து போன போராளிகளின் எண்ணிக்கையை ஒன்றுக்கு இரண்டாகப் பெரிதுபடுத்திக் கூறிக்கொண்டிருந்தது.

..... பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் பதினெட்டுப் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமுற்ற தமது சகாக்களையும் தூக்கிக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர். இம்மோதலில் பாதுகாப்பு படையினருக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை........

எங்கும் போரும் அழிவும் அகதிகளும்!

மந்திரிக்கு அந்தரநிலை ஏறிக்கொண்டு வந்தது

அரசாங்கம் சமாதானத்துக்கான போரை நடத்திக் கொண்டிருக்கிறது.

ஆறுதலாய் குந்த ஒரு இடமில்லை.

போர் இல்லாமல் இந்த உலகமே இயங்காதா?

போர் எதற்கு?

ஒவ்வொன்றிடமும் தன் அடையாளத்தைப் பற்றிய அழுத்தம் இருக்கும் மட்டும் போர் இருந்தே ஆகும். மந்திரிக்கு ஏனோ எரிச்சல் எடுப்பதுபோல் இருந்தது.

ஒவ்வொரு கணமும் பலமுள்ளது பலவீனமானதை விழுங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

பலவீனமானது தனது அடையாளத்தை இழக்கிறது. பலமுள்ளது தனது அடையாளத்தை எல்லாவற்றிலும் திணிக்கிறது.

மந்திரிக்கு இரண்டு உலகப் போர் நினைவுக்கு வருகிறது.

தூய ஆரிய இன அடையாளத்தை ஸ்தாபிக்க முனைந்த ஜேர்மனியின் முனைப்பே இரண்டு யுத்தமும்! Kultur Race ஆனால் இந்த யுத்தங்கள் மார்க்சீய பொருளாதாரக் கோட்பாடுகளின் மனித இயல்பூக்கங்கள் பற்றிய ஆழமின்மைகளை புட்டுக்காட்டிச் சென்றது. மந்திரிக்கு நினைவு வந்தது.

பொருளாதாரப் பொதுவுடமை என்று கத்திய ரஷ்ஷியாவே நாஸிப்படை வந்து ஸ்ரலின் சிராட்டை ஒரு உலுக்கு உலுக்கிய போது. பொதுவுடமைச் சுலோகங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, வீர ரஷ்ஷிய நாட்டையும் ஸ்லாவ் இன உணர்வுக் கோஷங்களையும் தான் கூவியழைத்தது! என்ன பொருளாதாரக் காரணங்களுக்காகப் போர் ஏற்பட்டாலும் அது ஈற்றில் தன் வெற்றிக்காக தன் இனம், தேசியம் என்னும் அடையாளங்களை-கருத்துக்ளைத்தான் மாட்டிக் கொள்கிறது.

மந்திரிக்கு சிரிக்க வேண்டும் போல் இருந்தது.

ஆனால் மந்திரியின் தோள்களுக்கு மேலால் யாரோ பெரிதாகச் சிரிப்பது போல் கேட்டது.

யார் சிரிப்பது? மந்திரி ராசாவைப் பார்த்தது. ராசா வழமைபோல் மூஞ்சி முழுக்கக் கண்ணாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

இந்த ராசாவுக்கு என்ன அடையாளம்?

இது எதன் அடையாளம்?

அடையாளங்களுக்குள் தான் மனிதனின் இருப்பு.

அடையாளங்கள் இல்லாவிட்டால் மனிதன் செத்துவிடுவானா?

பலமான ஒரு சிரிப்போசை எழுந்தது.

ராசாதான் சிரிக்கிறதா?

அந்தரித்துத் திரியும் நீ. எந்த அடையாளத்துக்குள் போய் குந்தத் தவிக்கிறாய்?

மந்திரி தன்னையே கேட்டுக் கொண்டதா? இல்லை, மந்திரியின் அருகே கிடந்த ராசா தான் அக்கேள்வியை எழுப்பி விட்டதா?

சொல் எது உன் அடையாளம்?

மீண்டும் அக்குரல் சவுக்குப்போல் மந்திரியை சுற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்தது.

நான் ஓர் ஈழத்தமிழன்!

மந்திரியிடமிருந்து வந்த பதிலை, மந்திரியே வேறு யாரிடமிருந்தோ வருவதுபோல் ஆச்சரியத்தோடு விடுபட்ட நிலையில் கேட்டது,

ஈழத்தமிழன்!

மந்திரியே பெரிதாகச் சிரித்தது.

இல்லை, அது ராசாவின் சிரிப்பாகத்தான் இருக்கவேண்டும். அதற்கு மந்திரி தன்னை அறியாமல் பின்னணி கொடுக்கிறதா?

அவ்வாறே திடுதிப்பென ஓர் காட்சி மந்திரியின் முன் விரிகிறது.

ஒரு கல்லெறிபட்டதும் கூட்டமாய் இருந்த காகங்கள் எல்லாம் சிதறி திக்குத் திக்காய் பறந்தோடுவதுபோல் எங்கெல்லாமோ பரதேசிகளாய் பறந்து கொண்டிருக்கும். ஈழத்தமிழர்கள்! நேற்று யாழ்ப்பாணம் என்னும் பனங்கூடலில் இருந்து கூழ் குடித்து, அருவி வெட்டி, துலாமிதித்து, தோட்டம் செய்து வாழ்ந்திருந்த கூட்டம். இப்போ எங்கோ எங்கோ எல்லாம் திக்குத்திக்காய்...... இந்த லட்சணத்தில் நான் ஓர் ஈழத்தமிழன்!

' கட கட ' வென்ற பெருஞ் சிரிப்பு!

ஆயிரம் ஆயிரம் பொய் சொல்லி வவுனியாவைக் கடந்து கொழும்பை நோக்கி வந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர்கள்! எப்படியாவது பனங்கூடலை உதறிவிட்டு வருவதில் காட்டும் வேட்கை! கொழும்பில் வந்து, அங்கு குந்தி, இங்கு குந்தி பொலிஸ் நிலையங்களைத் தரிசித்து திடீரென ஒருநாள் பிறநாட்டுக்கு பிளேன் எடுக்கும் ஈழத்தமிழர்......

மந்திரியின் கண்முன்னே அதுவிட்டுவந்த பனங்கூடலில் இப்போ கொஞ்ச இளமட்டங்கள் ஆயுதங்களைத் தூக்கியவாறு ஈழத்தமிழர் என்னும் அடையாளங்கள் பதுங்கியும் நிமிர்ந்தும் திரியும் காட்சி ஓடி வருகிறது. அதன் நெஞ்சு துயரால் கனக்கிறது.

நான் ஓர் ஈழத்தமிழன்!

மந்திரிக்கு மீண்டும் துயர் கவிவது போல் இருக்கிறது.

நான் ஓர் ஈழத்தமிழன்!

அடையாளம்! பொருள்!

இவற்றைத்தான் மனிதன் கட்டிப் பிடிக்கிறான். ஆனால் ஆபத்து வரும்போது எல்லாவற்றையும் உதறிவிட்டு உயிர்தப்பினால் போதுமென ஓட்டமெடுக்கிறான். சிறிது சுமுகநிலை ஏற்பட்டதும் அடையாளத்தை தக்கவைத்துக் கொண்டு பொருளைக் குவிக்கும் ஆசை!

அடையாளம் என்னும் கருத்துக்குள் அவன் ஆணவத்தின் இருப்பு, பொருளின் சேகரிப்புள் அவன் ஆசையின் இருப்பு.

கருத்தையும் பொருளையும் கட்டிப்பிடிக்கும் மனிதன் எல்லாவற்றுக்கும் காரணமாக நடுவில் இருக்கும். மனிதனை மறந்து விடுகிறான்.! இன்று கருத்தும் பொருளும் மாறி மாறி மனிதனை குழி தோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கின்றன.

40 லட்சத்துக்கு மேலான யூதர்களைக் கொன்றொழித்த ஹிட்லர்!

அதற்கும் மேலான மக்களை பொதுவுடமையின் பேரில் கொன்றொழித்த ஸ்ரலின்!

எல்லாவற்றுக்கும் ஒரு அடையாள மூலம்!

அடையாளந்தான் மனிதனா?

அடையாளம் இல்லாவிடில் மனிதன் இல்லையா?

அண்மைக்கால இலங்கை அரசியலில் ஆட்சிக்கு வந்த தலைவர்கள் தம்மைப் பழங்கால இலங்கை அரசர் அரசிகளோடு அடையாளம் காண முனைந்தது. மந்திரிக்கு நினைவு வந்தது,

56ல் தியசேன குமாரயா.

62ல் விஹாராமகாதேவி

77ல் ஜயவர்த்தன புரக்கோட்டை அரசன்.

95ல் செண்பகப் பெருமாள்.

ஒவ்வொரு அடையாளங்களும் ஈழத்தமிழர் அடையாளங்களுக்கு பேரழிவோடுதான் வந்தன!

இதற்குப் போட்டியாக தமிழ்ப் பகுதிகளிலும் சேர, சோழ, பாண்டிய அடையாளங்கள் நிழல் எறிந்தன. களம் பல கண்ட காளைகள் நூலுருப் பெற்றன!

உனது அடையாளம் என்ன?

மந்திரி தன்னையே கேட்டுக் கொண்டதா?

அல்லது ராசாதான் மீண்டும் அதனுள் குரல் கொடுத்தா?

நான் ஓர் ஈழத்தமிழன்!
நான் ஓர் சிங்களவன்!
நான் ஓர் முஸ்லிம்!
நான் ஓர் கிறிஸ்தவன்!
நான் ஓர் பௌத்தன்!
நான் ஓர் கொம்யூனிஸ்ட்!
நான் ஓர் சோஷலிஸ்ட்!
நான் ஓர் ஜனநாயகவாதி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை அடையாளங்கள்! மந்திரி தனக்குள் சொல்லிக் கொண்டது. சொல்லிவிட்டு இடையில் பெரிதாகச் சிரித்தது.

ஏன் சிரிக்கிறாய்?

மந்திரி தன்னையே கேட்டுக் கொண்டதா?

சிரிக்காமல் என்ன செய்வது? எல்லாவற்றுக்குள்ளும் நான்தான் கொழுத்து நிற்கிறது. மனிதனைக் காணவில்லை!

நான் ஈழத்தமிழன். நான் சிங்களவன். நான் பௌத்தன். நான் கம்யூனிஸ்ட்.... நான் நான்......

மீண்டும் சிரிக்கிறது பைத்தியக்காரன் போல்!

எத்தனை அடையாளங்கள்! இவை தேவையா?

இந்த அடையாளங்கள் மனிதனுக்கு விடுதலையா? விலங்கா?

மந்திரிக்குள் இக்கேள்விகள் எழுந்தன.

இவையெல்லாம் இப்போ பெரிய விலங்குதான்!

மந்திரிக்குள் தானாகவே எழுந்த பதில் ராசாவிடம் இருந்தே வந்ததுபோல் பட்டது. மேலும் அது தொடர்ந்து விளக்குவது போல் தெரிந்தது,

இன்றைய மனித முன்னேற்றம் என்பது மனிதன் பற்றிய அகப்புற அறிவின் ஆழத்திலும் அதை வெளிக்காட்டும் மொழியின் கூர்மையிலும் தான் உள்ளன என்றால் அந்த அறிவைப் பெறுவதும் அதை வெளிக்காட்டும் மொழியைக் கற்பதுமே அவசியமாகும். இவை தவிர்ந்த ஏனைய மொழி, சமய, இனப்பற்றுக்கள் எல்லாம் தேவையற்றவை. மனித முன்னேற்றத்திற்குத் தடையானவை இல்லையா?

மந்திரி பேசாமல் இருக்க, இக்கருத்துக்கள் எல்லாம் தானாகவே மந்திரிக்குள் குமிழிகள் போல் வந்து வந்து உடைந்தன.

அப்படியானால் தேசம் தேசமாய் பரதேசிகளாய்த் திரியும் ஈழத்தமிழர் இந்த முற்போக்கான வேலை தான் செய்கிறார்களா?

மந்திரி ஏளனமாகக் கேட்டது. பின்னர் சிரித்தது.

இல்லை. அவர்கள் உயிருக்குப் பயந்து ஓடுகிறார்கள். அவர்கள் தங்களைக் காப்பாற்ற ஓடுகிறார்கள்.

ராசாவிடம் இருந்து பதில் வருவதுபோல் இருந்தது.

அப்படிப் பயந்து ஓடச் செய்வது எது? அப்படி மக்களை ஓடச் செய்யும் ஒடுக்குமுறை எது? இந்த ஒடுக்குமுறை எங்கிருந்தாலும் என்ன பேரில் இருந்தாலும் அதற்கெதிராகப் போராட வேண்டாமா? மந்திரி இப்படிக் கேட்டது.

போராடத்தான் வேண்டும்! ஆனால்......

என்ன ஆனால்?

ஆனால் நான் ஈழத்தமிழனாகவோ, சிங்களவனாகவோ முஸ்லிமாகவோ, கொம்யூனிஸ்டாகவோ எந்த அடையாளத்துக்குள்ளும் நின்று போராட மாட்டேன்.

அப்போ?

மனிதனாக நின்றுதான் போராடுவேன். எனது போராட்டம் எந்த அடையாளத்துக்குள்ளும் புதைக்க முடியாதது. அப்போதான் அது எல்லா மனிதருக்கும் உரியதாய் இருக்கும்.

மந்திரி பேசாமல் இருக்க இந்த வார்த்தைகள் அதற்குள் வந்து விழுவன போல்பட்டது. ராசா தனக்குள் படிப்படியாக மந்திரியை உள்ளிழுத்துக் கொண்டிருக்கிறதா?

மந்திரி மௌனமாகி ராசாவின் ஈர்ப்பு நீரோட்டத்தோடு கலந்தோட தயாராகுவது போல்பட்டது.

அப்போது தூரத்தே பேரிடிபோல் ஏதோ வெடித்து சிதறுவது கேட்டது.

திடீரென வெளியே அமைதி கெட்டு அந்தரம் பற்றிக்கொள்வது தெரிந்தது, சனங்கள் ஓலமிட்டவாறு ஓடுவது கேட்டது. வாகனங்கள் அந்தரப்பட்டு ஹோர்னை அழுத்திச் சப்தமிட்டவாறு விரைவது கேட்டது. எங்கும் ஓர் அந்தரம் புயலாக வீசுவது தெரிந்தது, எங்கும் இனி அமைதியாகத் தரிக்க முடியாது.

வெளியில் வீசிய அந்தரம் மந்திரியையும் தன் கைக்குள் இறாஞ்சி எடுத்து நிலத்தில் ஓங்கி அறைந்தாலும் அறையலாம்.

மந்திரி பயத்தாலும் பீதியாலும் சிறகை விரித்து எங்கும் பறக்க முடியாது உள்ளோய்ந்து போகிறது.

இனிமந்திரியின் அடையாளத்தை கேட்டு பொலிசார் வீடு தேடி வருவார்கள்.

மந்திரி தன் தேசிய அடையாள அட்டையைக் காட்டினாலும் விடமாட்டார்கள்.

ஒருவேளை தேசிய அடையாள அட்டை அவர்களால் கிழித்தும் எறியப்படலாம். மந்திரியின் இனத்தைப் பற்றி அவர்கள் வைத்திருக்கும் அடையாளம் என்ன? அது வேறுவகையானதாக இருக்கலாம். இனி அந்த அனெக்ஸ்ஸிலும் மந்திரியால் நிம்மதியாகப் போய்த் தரிக்க முடியாது. எந்நேரம் வந்து பொலிசார் தட்டுகிறார்களளோ, யார் கண்டது? "பயங்கரவாதி" என்ற அடையாளம் குத்தப்பட்டு மந்திரி இழுத்துச் செல்லப்படலாம்.

நடுங்கும் உடலை சிறகுகளால் இறுக்கியபடி கிடுகிடுக்கும் பற்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொண்டுகளால் மறைத்தபடி மந்திரி ராசாவைப் பார்த்தது.

ஏன் நடுங்குகிறாய்? ஏன் அந்தரப்படுகிறாய்? ஏன் பயப்படுகிறாய்?

ராசா வழமையான அமைதியை விட இன்னும் இரட்டித்த அமைதிச் செறிவோடு அப்படியே இருந்தது. ஆனால் அதன் குரல் மந்திரிக்குள் உள்ளொலிப்பது போல் பட்டது.

ஏன் அந்தரப்படுகிறாய்? ஏன் பயப்படுகிறாய்? நீ பயப்படும் அளவுக்கு அப்படி என்ன நடந்து விட்டது.

மீண்டும் ராசாவின் குரல் உள்ளொலித்தது.

மந்திரி சிறிது யோசித்தது.

நீ என்னைப் பார்!

ராசா கட்டளையிட்டது. அதை ஏற்று மந்திரி ராசாவைப் பார்த்தது.

என்னையே பார்த்துக் கொண்டிரு! மனதை அலையவிடாதே!

மந்திரி அப்படியே செய்தது.

இவ்வளவு நேரமும் பலதை எண்ணி நடுங்கிக் கொண்டிருந்த மந்திரி இப்போ நல்ல வாய்ப்பான இடம் தன்னோடேயே இருப்பதைக் கண்டுவிட்டதுபோல் ஆனந்தமாய் ராசாவில் போய் குந்தியது. உடனே அதற்கு முன்னைய போக உணர்வின் எச்சங்கள் தலைதூக்கியது. ஆனால் கணப்பொழுதில் ஓர் புது உணர்வு வெடித்து விசாலித்து பழைய போகக் கிறுக்கங்களையெல்லாம் அற்பமாக்கியது. ஓர் அமைதியும் இதமும் எழுந்தன. பின்னர் அப்படியே ஓர் பெருவெளிக்குள் புகுவதை மந்திரி உணர்ந்தது. தனது தலையில் இதுகாலவரை தூக்கிவைத்திருந்த பாரங்கள் நீக்கப்படும் சுகம் தெரிந்தது. இப்போ அவை அர்த்தமற்று இதுகாலவரை சுமக்கப்பட்டதாகப் பட்டது.

ஆனால் அவ்வேளை திடீரென அதற்கொரு பயம் எழுந்தது.

தான் மெதுவாக இல்லாமல் போகப் போவது போல் பட்டது. தன் அடையாளத்தை தான் இழக்கப்போவது போல் அது பயந்தது.

நான் எங்கே? நான் எங்கே?

மந்திரி பீதியால் உந்தப்பட்டுக் கத்தியது.

தனக்கருகே இருந்த ராசாவின் உருவம் மறைந்து வெளியாக மாறுவது போல் மந்திரிக்குப் பட்டது.

அந்த வெளியோடு வெளியாக தானும் கரைவது போல் மந்திரி உணர்ந்தது.

நான் எங்கே? நான் எங்கே?

கரைந்துபோகும் தன் அடையாளத்தை கரைக்கவிடாது. தன் அடையாளத்தின் நாயகனாக இருக்கும் "நானை" இறுகப் பிடித்தபடி மந்திரி கத்திற்று.

துகில் உரியப்படும் பாஞ்சாலி ஒற்றைக் கையால் சேலைத் தலைப்பை அணைத்தபடி மறுகையால் கண்ணனைக் கூவியழைத்த நிகழ்ச்சி மந்திரியின் நினைவில் தெறித்தது.

அடுத்த வினாடி தான் தன் அடையாளத்தை இழந்து கரைந்து போவதை விரும்பாத மந்திரி அந்நிலையிலிருந்து விடுபட திமிறிக் கொண்டு எழுந்தது.

ஆனால் அப்போது ராசாவை எங்கும் காணவில்லை. எங்கும் எல்லாம் வெளியாய்த் தெரிந்தது.

நீ ஏன் பயப்படுகிறாய்?

அந்த வெளிக்குள் இருந்து ராசாவின் குரல் கேட்டது.

நீ எங்கே இருக்கிறாய்?

மந்திரி கத்தியது.

நான் இங்கே இருக்கிறேன்.

ராசா பதில் கூறிற்று

இங்கே என்றால் எங்கே?

மந்திரி துருவித் துருவிக் கேட்டது.

நான் இங்கே இருக்கிறேன். எல்லாமாக இருக்கிறேன். எல்லாமாக வியாபித்திருக்கிறேன். நீயும் என்னிடம் வா. எல்லா அடையாளங்களும் என்னிடமிருந்துதான் வருகுது.

ராசா கூறிற்று.

என்னைச் சாகச் சொல்கிறாயா?

மந்திரி கேட்டது.

இது சாதல் அல்ல. உன் அடையாளத்தை விடுதல். உன் தனி அடையாளத்தை விட்டு விட்டு எல்லா அடையாளங்களின் மூலமாக இருத்தல். வா என்னிடம்.

ராசா விளக்கியது.

என்னால் முடியாது. என் அடையாளத்தை எனக்கு விடமுடியாது.

மந்திரி எதிர்த்தது.

அப்படியானால் நியாயமான உன் அடையாளத்துக்காகப் போராடவும் முடியாது.

ஏன்.?

உன் அடையாளத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு உன் அடையாளத்துக்காகப் போராடினால் மேலும் பல தேவையற்ற அடையாளங்கள் பெருகுமே ஒழிய உன் அடையாளத்துக்கு விடுதலை வராது. பயங்கரவாதம், பாஸிசம், அராஜகம் என்னும் தேவையற்ற புதுப்புது அடையாளங்கள் தான் பெருகும். ஆனால் உன் நியாயமான அடையாளத்துக்கு விடுதலை வராது! போராட்டம் நீண்டு கொண்டு போகும்.

இதெல்லாம் எனக்கு விளங்காது. ஆனால் நான் என் அடையாளத்தை விடமாட்டேன். நான் என் அடையாளத்தோடு நிம்மதியாக எனக்குரிய இடத்தில் குந்தியிருக்க வழி சொல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் நான் சொல்லி விட்டேனே!

அது எனக்கு விளங்காத வழி.வேறு வழி சொல்லு.

அதுதான் ஒரே வழி. இனிவரப்போகும் வழி!

எனக்கது விளங்காது. எனக்கு அதைவிளங்கிக் கொள்ள பொறுமையுமில்லை. வேறுவழி சொல்!

அது தான் ஒரே வழி. பொறுமையாக இருந்து யோசித்துப்பார்.

அப்போ என்னைக் கைவிட்டு விட்டாயா?

நான் கைவிடவில்லை. நீதான் என்னோடு கைகோத்துவர மறுக்கிறாய்! வா என்னோடு போராடுவோம்.

முடியாது! முடியாது! உன்போராட்டம் எனக்குப் புரியாது! நீ என்னை ஏமாற்றுகிறாய்! ஐயோ........

மந்திரி அப்படியே குந்தியிருந்து அழத் தொடங்குகிறது. கைவிடப்பட்ட அகதிபோல்!

அப்போது ரோட்டோரமாகக் குந்தியிருக்கும் அகதிகளும் அகதி முகாம்களில் கிடந்து அல்லல் படுவோரும், கையிழந்தவர்களும், கால் இழந்தவர்களும், கைவிடப்பட்டவர்களும், சடைத்த பேர்விருட்சத்தில் வந்து விழும் வௌவால்களைப் போல் மந்திரியைச் சூழ்ந்து மொய்ப்பது போன்ற ஓர் தரிசனம் ராசாவுக்கு ஏற்பட்டது. மொய்த்தவர்கள் "நாங்கள் எங்க போறது? எங்க போறது? எங்களைக் கைவிட்டிட்டியா? எங்களுக்கினி ஒரு வழியில்லையா?" என்று மந்திரியை உலுக்குவதுபோல் பட்டது. அவ்வேளை கனகாலமாக மந்திரியைக் காணவேண்டும் என்னும் ஆசையைத் தேக்கி வைத்திருந்த " சிவசாமி " அங்கே மிதந்து வருவதை ராசா கண்டது. வந்தவன் கலவரமடைந்தவனாக, மந்திரி முன்னே நின்று "மாஸ்டர் வெளியே பொலீஸ் ! மாஸ்டர் வெளியே பொலீஸ் "என்று கத்தினான். ராசா வரட்டுச் சிரிப்புச் சிரித்தது........

மந்திரி நிமிரவில்லை!

வெளியே கதவு தட்டப்படும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது.

அடுத்த தமிழ் மகளில் ஆரம்பம்!
அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர்
திரு. இ. ஜெயராஜ் எழுதும்
அழியா அழகு
தொடர் கட்டுரை. கனிச்சுவைத் தமிழில்
கம்பராமாயணக் காட்சிகள்
கண்ணுக்கு விருந்து கருத்துக்கு அமுது.
வாசிப்புக்குத் தனி இன்பம்
எதிர்பாருங்கள்!

# ஈழத்து இலக்கியம் பல்துறை நோக்கு

நா. சோமகாந்தன்

அண்மையில் மணிவிழாக் கண்ட எழுத்தாளர் நா. சோமகாந்தன் ஈழத்துச் சோமு என்ற பேனாப் பெயரில் பிரபலமானவர். சிறுகதை, நாவல், கட்டுரை ஆகிய ஆக்க இலக்கியங்களைப் பல ஆண்டுகளாகப் படைத்துவருபவர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதுகெலும்பாய்த் திகழ்பவர் ஈழத்து இலக்கியத்துறைகளை அனுபவபூர்வமாக அறிந்தவர்.

இத்தொடரை இளந்தலை முறையினருக்கு ஒரு வரலாற்றுப் படையலாய் இதழ்தோறும் தமிழ் மகள் தருகிறாள்.

## 3. சிறுகதைகளில் பிரதேசப் பேச்சுமொழி

"இப்பவெல்லோ உதுகள் காசுக்கும் வடிவுக்கும் கலியாணம் முடிக்கிறதுகள். உங்கை காசுக்கும் வடிவுக்கும் கலியாணம் முடிச்ச ஆக்களின்ரை பொட்டுக்கேடு எங்களுக்குத் தெரியாதே? அப்புலிங்கத்தின்ரை பெடிச்சிக்கு அச்சுவேலியிலிருந்து பணக்கார மாப்பிளையொண்டு கொண்டுவந்தினம். அவன் பெரிய பணக்காரனாம், கொழும்பிலை உத்தியோகம்: நாலைஞ்சு வீடு: இரண்டு கார் எண்டு எல்லோரும் புழுகிக் கொண்டு திரிஞ்சினம். அது போதாதெண்டு அப்புலிங்கமாக்களும் இரண்டு லட்சம் ரூபா சீதனமாக்குடுத்தினம். கடைசியாகக் கண்ட தென்ன? அவன் மூண்டு மாதத்திலை பெட்டையை விட்டிட்டு ஓடியிட்டான். காரையும் காசையும் பாத்தினமேயொழிய வேறையொண்டையும் பாக்கயில்லை."

அண்மையில் வெளிவந்துள்ள உடுவை தில்லை நடராஜா அவர்களின் " நிர்வாணம் " சிறுகதைத் தொகுதி 'அப்பக்கடை நடக்கிறது ' கதையில் வரும் ஆச்சி பாத்திரத்தின் அனுபவ உணர்வு அந்தப் பிரதேசத்துக்கே உரிய இயல்பான பேச்சுமொழியில் மேலே கண்டவாறு எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பந்தியைப்படிக்கின்ற போது, இலங்கையில் வாழும் தமிழ் வாசகர் ஒருவர் கதை நிகழுகிற பிரதேசத்தையும், அந்தப் பிரதேச மக்களின் ஆசாபாசத்தையும் எண்ண ஓட்டங்களையும் எதுவித சுட்டிக்காட்டலுமில்லாமல் எளிதே உணர முடிகிறது.

செய்யுள், காப்பியம் போல - சிறுகதை தமிழில் பல நூற்றாண்டுகளாக வழக்கிலிருந்து வரும் உருவம் அல்ல. சிறுகதை என்னும் உருவம் தமிழுக்கு வந்து சுமார் ஆறு தசாப்தங்கள் தான் ஆகின்றது. இந்த நூற்றாண்டின் முப்பதுகளில் தமிழுக்கு வந்த சிறுகதையை இலக்கியம் என்று கூறப்படுவதையே எதிர்த்தவர்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஆரம்பத்தில் தமிழ்ச் சிறுகதை முயற்சியில் அடியெடுத்து வைத்தவர்கள் ஆங்கில மொழித் தொடர்பும் தமிழ் மொழிப் பயிற்சியும் மிக்கவர்கள். தமிழ் இலக்கண மரபு மீறப்படாமல் மிக எச்சரிக்கையாகவே - பேச்சு வழக்கு தமது படைப்புக்களில் புகுந்து விடாமல் - சிறுகதைகளைப் படைக்க முற்பட்டனர் எனலாம். அக்காலத்தின் தமிழ் நாட்டுச் சிறுகதை முயற்சிகளே இவர்களுக்கும் ஆதர்சமாக்கப்பட்டது. எனவே சுமார் முதல் இருதசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட தமிழ்ச் சிறுகதை முயற்சிகளில் இலங்கை - தமிழினம் என்ற வித்தியாசம், வேறுபாடு இன்னும் அழுத்தமாகச் சொன்னால் நாட்டின் தனித்துவம் - பெருமளவு தெரியாதபடி அக்காலப் படைப்புக்கள் அமைந்திருந்தன எனலாம்.

தி. ஜானகிராமன், பிச்சமூர்த்தி, கு.ப.ரா., சுந்தரராமசாமி முதலியோர் பிராமணத் தமிழையும் புதுமைப் பித்தன் வல்லிக்கண்ணன் பின்னர் ஜெயகாந்தன் முதலியோர் மெட்றாஸ் தமிழையும் கி. ராஜநாராயணன் கரிசல் காட்டுத் தமிழையும் தாராளமாகத் தவழவிட்டு சிறுகதைக்கு புது மெருகேற்ற முற்பட்ட போதும், இலங்கை நாட்டின் அக்காலத்தமிழ் எழுத்தாளர்கள் தமது மண்ணுக்கேயுரித்தான பேச்சு மொழிகளைப் புகுத்தி சிறுகதை ஆக்கங்களைச் செய்வதில் தயக்கங் காட்டினர். ஆனால் வானொலி நாடகங்களில் பேராசிரியர் கணபதிப் பிள்ளையும், இலங்கையர் கோனும் சிறப்பாக யாழ்ப்பாணத்தமிழைப் புகுத்தி - சிறுகதை, நாவல் துறைகளில் பின்நாளில் பேச்சு மொழி புகுத்தப்படுவதற்கு முன்னோடிகளாக விளங்கினர்.

1950 இன் பிற்பகுதியில் இலங்கைத்தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை புதிய பேரலையொன்று பொங்கி எழுந்தது, நமது இலக்கியம் நம்நாட்டு மக்களின் வாழ்வை, வாழ்க்கைப் போராட்டங்களை, எண்ணங்களை, அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும்: நமது மண்வாசனையும், தனித்துவமும், நமது மரபும் இவற்றில் வெளிப்பாடு பெறுதல் வேண்டும் என்ற பேரியக்கம்: பரவியது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தோற்றமே இதன் காரணமாகக் கொள்வார் பேராசிரியர் கைலாசபதி அவர்கள்.

"தேசிய இலக்கியம் என்ற குரல் எழுந்ததும் அதையொட்டி நடந்த காரசாரமான சர்ச்சைகளும் புதுமை இலக்கியத்துக்கும் பண்டித மரபிற்கும் நடந்து வந்த யுத்தமும் அதுகாலவரை தொடப்படாத பிரச்சனைகளாய் இருந்த பலவற்றை சந்திக்கு இழுத்துவிட்டன. அவற்றுள் ஒன்று பேச்சு வழக்கினை இலக்கிய ஆக்கத்துக்குப் பயன் படுத்துவதன் சாதக பாதகம் பற்றிய வாதப் பிரதிவாதமாகும்! தவிர்க்க முடியாதவாறு உயிர்த்துடிப்புள்ள பேச்சு வழக்கே வாகை சூடியது" பேராசிரியர் கைலாசபதி அவர்களின் இக்கூற்று பேச்சு வழக்கு புனைகதைகளில் இடம் பெறும்போதுதான் அப்படைப்பு உயிர்த்துடிப்பு மிக்கதாக அமையும் என்பதனை வலியுறுத்துகின்றது. தேசிய இலக்கியம் ஊட்டி விட்ட விழிப்பு உணர்வினால் உந்தப்பட்ட பலர் இலங்கையின் பல்வேறு பிரதேசங்குக்குரிய பேச்சுமொழியை தமது படைப்புகளில் கையாண்டு உரை நடைக்கு வலுவும் வனப்பும் ஊட்டினர்.

எஸ்.பொ., கனக செந்திநாதன், டொமினிக் ஜீவா, கே டானியல், செ.கணேசலிங்கன், என்.கே. ரகுநாதன், நீர்வை பொன்னையன், சில்லையூர் செல்வராசன், காவலூர் ராசதுரை, அ.முத்துலிங்கம், ஈழத்துச்சோமு, அகஸ்தியர், மு. தளையசிங்கம், செ. கதிர்காமநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், பெனடிக்ட் பாலன், செ.யோகநாதன், க. சட்டநாதன் முதலியோர் 60 களில் இலங்கையின் வடக்குப் பிரதேசப் பேச்சு மொழிக்கு இலக்கிய அந்தஸ்து தேடிக் கொடுத்தனர்.

என். எஸ். எம். ராமையா, நந்தி, தெளிவத்தை யோசப், எம். வாமதேவன், முத்து சிவஞானம், சாரல் நாடன், குன்றவன் முதலியோர் 60களில் மலையக மண்வாசனை கொண்ட சிறந்த சிறுகதை சிருஷ்டிகளை இலங்கைத் தமிழ் இலக்கியத்துக்கு நல்கினர்.

கிழக்கிலங்கையின் பேச்சு மொழிகளைச் சிறப்பாக அக்காலத்தில் கையாண்டு சிறுகதை படைத்வர்களில் திருகோணமலை மாவட்டத்தின் வ.அ. இராசரத்தினம், க.ச. அரியநாயகம், மட்டக்களப்பு மாவட்டத்தின் மருதூர்க்கொத்தன், அன்புமணி, நவம், ரி. பாக்கியநாயகம் முதலியோரைக் குறிப்பிடலாம்.

முஸ்லிம்களுடைய சமூகச் சூழலையும் பேச்சு மொழியையும் அபுதாலிப் லத்தீப், அ.ஸ. அப்துஸ சமது நயீமாசித்தீக் முதலியோர் அக்காலத்தில் திறம்படத் தமது சிறுகதைகளில் கையாண்டுள்ளனர்.

தினகரன், சுதந்திரன், கலைச்செல்வி என்பன மண்வாசனை கொண்ட இலங்கைத் தமிழ் சிறுகதைகளின் பிரதான களமாக அறுபதுகளில் திகழ்ந்தன.

அறுபதுகளைத் தொடர்ந்து இலங்கையில் வெளியாகும் 99 வீதமான சிறுகதைகளுமே அந்த சிருஷ்டியை ஆக்கும் எழுத்தாளர் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவரோ, அப்பிரதேசத்து மக்களின் வாழ்க்கையை பிரதிபலிப்பதாயும் அந்த மண்ணின் மணத்தைக் கொண்டதாகத் திகழ்வதை அவதானிக்ககூடியதாக அமைந்தன. இன்று பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் பிரசுரமாகும். அல்லது தொகுதியாக வெளிவரும் சிறுகதைகளைப் படிக்கும் போதே ஒருவர் குறிப்பிட்ட பிரதேசத்தின் சூழல், மக்களின் வாழ்வு, அவர்களின் ஆசாபாசங்கள், அவலங்கள், அப்பிரதேசத்தின் பேச்சு வழக்கு முதலிய வற்றை அப்படைப்புகளில் தரிசிக்க முடிகின்றது.

"சென்ற மாதம் 26ந் திகதி சனிக்கிழமை.........சனியோடு சனி எட்டு: 3 சனி 22. 4 சனி 29 - ஞாயிறு 30 - இன்றைக்குத் திங்கள் சோமவாரம் 31 நாள்..............
26 நாள் எங்கே என்று பார்த்துத் தவறாமல் வருவது.......
இம்முறை......

ஓ! .........மலர் ஒன்று விரிந்தது ரோஜாவில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்காருங்கோ... இண்டைக்குச் சோமவாரம் ஒருக்காச் சிவன் கோயிலுக்கு போயிட்டு வருவமோ"

"என்ன?........ என்ன விசேஷம் இண்டைக்கு........ வேலையால் வந்தால் களைப்பாய் இருக்கெண்டு படுக்கிறனீர்....... இண்டைக்கு கோயிலுக்கு வெளிக்கிடுறீர் "

இவள் சேகரை நெருங்கி வந்தாள்.

"இந்தமுறை நாலைஞ்சுநாள் தள்ளிப் போட்டுது ஒருக்கால் போய்க் கடவுளைக் கும்பிடுவம். "

சேகர் சிறிதாய்ச் சிரித்தான். மலர்ந்த சிரிப்பு!

"என்னாலை உங்கடை சைக்கிளிலை இருக்கேலாது...... நீங்கள் குலுக்கி எடுத்துப் போடுவியள்"

காலுக்குமேல் கால்வைத்து மெல்ல நடந்து போனாள்.

இது கோகிலா மகேந்திரனின் அண்மைய சிறுகதை ஒன்றிலிருந்து ஒருபகுதி வலிகாமம் கிழக்குப் பிரதேசத்துக்குரிய "இண்டைக்கு, ஒருக்கா, எண்டு, கும்பிடுவம், உங்கடை"முதலிய சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

அடுத்து தெணியானின் சிறுகதையொன்றிலிருந்து ஒரு வர்ணனை: வடமராட்சி வாடை அதில் மணக்கிறது.

"மாஸ்ரர் ஒரு சுள்ளலி : பனையாக வளர்ந்த ஆடுகால். அவருக்கு அந்தக்கால் இருந்தும் பயனில்லாத அளவில் உயர்ந்து கிடக்கிறது. கடை விறாந்தை, விறாந்தைக்கென்று அமைந்திருக்கும் தனிவழி ஒரேயொரு ஒற்றையடி. அந்தப் படியிற் கால்வைத்து மாஸ்ரர் மேலே ஏறி வருகின்றார். "

திக்குவல்லை கமால் தென்னிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையையும் வழக்குமொழியையும் தமது சிருஷ்டிகளில் சிறப்பாகக் கையாண்டு வருபவர். இதோ ஒரு சிறு உதாரணம். 'அந்த இறுக்கமான உறவு அர்த்தமற்றுப் போய்........ அறுபட்டு...... இப்பொழுது எத்தனை வருஷங்கள் ஓடி உருண்டுவிட்டன.

"எனத்தியன் வாப்பா..... நீங்க வந்திப்ப எவ்வளவு நேரமன்?..... அஞ்சி மணியாகப்போற....... இன்டேக் குளிக்கோணுமெண்டு சென்னே...... தண்ணியெடுத்துத் தாரன் வாங்கொ....."மகள் மசீதா தான் வந்து கேட்டாள்.

"மேல் கையெல்லம் ஒடச்சிப் போட்ட மாதிரி நோவு மகள்....... நாளக்கே பாத்துக்குளிக்கியன்"

"அப்ப கொஞ்சம் தண்ணி சுட வெச்சித்தாரன்...... மேல் கையைக் கழுவிக் கொண்டா கொணமாயீக்கும்."

"சரி சரி அது நல்லந்தான்" சாய்பு நானா விருப்பம் தெரிவித்து விட்டார்."

மலையக மக்களின் வாழ்க்கையின் அவலங்கள், ஏக்கங்கள், ஆசைகள் முதலியவற்றை - அவர்களின் பேச்சுமொழியைக் கையாண்டு சிறுகதைகள் படைக்கும் புதிய தலைமுறை எழுத்தாளர்களுள் மாத்தளை வடிவேலனும் ஒருவர் அவருடைய சிறுகதையிலிருந்து ஒரு பகுதியைப் பார்ப்போம்.

"தாயம்மாக் கிழவி விதியை நொந்தபடியே மகள் பேரிலுள்ள கொந்தரப்புக்கு தினமும் நடையைக் கட்டுவாள். கிழவி பென்சன் எடுப்பதற்கு முன்னர் பிள்ளை மடுவத்தில் பிள்ளைகளைப் பராமரிக்கும் வேலையைச் செய்து வந்தாள். அவள் கைப்பட்டு வளர்ந்தவர்கள் இன்று தோட்டத்தில் மட்டுமன்றி கொழும்பில் பெரிய சைவக்கடைகளிலும் தொழில் பார்த்து வருகிறார்கள். தீபாவளி பொங்கல் என்று வரும் தினநாள்களில் விதம் விதமாக உடுத்திக்கொண்டு தோட்டத்தை வலம் வரும் போது,

"ஏல பெரிய எளந்தாரியாகிட்டாக...... மூக்க வடிச்சிக்கிட்டு சாக்கில் கெடந்தத மறந்திட்டாக போல - நான் தூக்கி..... தொடச்சி வளர்த்தவ...." என்று இழுக்கும் போதே இளசுகள் - "இல்ல அம்மாயி, உன்னைய பார்க்கத்தான் வந்தேன் " என்று சங்கோஜத்துடன் " இந்தா வெத்திலை வாங்கிப் போடு " என்று சில்லறையைக் கொடுத்துவிட்டுப் போவார்கள். கிழவி மகராசனாய் இரு என்று வாழ்த்தி விட்டு சில்லறையை முந்தானையில் முடிந்து கொள்வாள்.

இலங்கையில் *1960* களில் பேச்சு வழக்கை புனைகதைகளிற் கையாண்டபோது "இழிசினர் இலக்கியம் " என்று அது எள்ளி நகையாடப்பட்டது. ஆனால் பிரதேசங்களின் பேச்சு வழக்கை நவீன இலக்கியங்களில் கையாளுவதென்பது இலக்கியத்துக்கு உயிரூட்டும் காலத்தின் கட்டாய தேவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது பழைய சங்கதியாகும்.

-தொடரும்

4ம் பக்கத் தொடர்ச்சி..

அங்கு மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒன்றுபடவேண்டும். எம்மை இறைவனுக்கு ஒப்படைத்து நாம் சும்மா இருக்கும் நிலையினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் அன்பினால் இணைந்து பிணைந்து அழுது காமுற்று அரற்றித் தொழுது தூமலர் தூவித் துதித்து நிற்கும் பெருவாழ்வே பிறவா இன்பப் பேரின்பத்தை நல்குவதாகும்.

" திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணா ராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எக்கிலிண்டன் ஏரம்புவும் மார்க்கம் மார்க்கண்டுவும்

## மோல் சந்திப்பு

அடி சச்கையெண்டானாம் அம்மன் கோவில் புக்கையெண்டானாம் இதென்னடப்பா...... இண்டைக்கு ஏரம்பர் கலகலப்பாக இருக்கிறார். என்ன புதினம் எண்டு கேட்டுப் பார்ப்பம்: ஏரம்பு..... இண்டைக்கு நல்ல முழிவியளம் போல கிடக்கு வலு குசியாய் வெத்திலையும் கையுமாய் இருக்கிறாய்.......

பின்ன....... இருக்காதா மார்க்கண்டு....... நானும் என்ரை மனிசியும் இப்ப வேற வீட்டிலையல்லோ இருக்கிறம். எங்கடை சொந்தக்காரப் பிள்ளையளோடுதான் இருக்கிறம். பெரியவள் இப்ப நல்லா திருந்திவிட்டாள். எங்கள் இரண்டு பேருக்கும் வருகிற வெல்பெயர் காசை உடன எடுத்து கையில் தந்திடுவாள். இப்ப நானும் என்ரை மனிசியும் நல்ல நிம்மதியாய் இருக்கிறம். அதோடை மார்க்கண்டு...... என்ரை மூத்தவள் மங்கை செய்த பிழையளை நானும் மனிசியும் பெரிசுபடுத்தி பார்க்கிறதில்லை. என்ன செய்தாலும் என்ரை பிள்ளைதானே! அதனால நாங்கள் பழசுகளை மனசில வைக்காமல் நடந்து வருகிறம். எங்க ரெண்டுபேருக்கும் உண்டான செலவுகளைத் தள்ளி மீதிப் பணத்தில பெரியவளுக்கு கொஞ்சம் வன்னியிலுள்ள சின்னவளுக்கு கொஞ்சம் அனுப்பியண்டு வாறன்.

அதென்ன ஏரம்பு ஒரு மாதத்திற்குள்ள இப்படியொரு மாற்றம். உன்ரை மகள் எப்படித் திருந்தி பணம் முழுக்க உங்கட கையில் தாறாள். அது பெரிய கதை மார்க்கண்டு...... உனக்கு தெரியுமே..... புகையிலைத் தெரிச்சல் நாக நாதியின்ரை இரண்டாவது பெட்டை கோமதி..... என்ரை மகள் மங்கை வீட்டுக்கு முன்னாலதான் இருக்கினம். இவை ரெண்டு வீடும் சரியான கொண்டாட்டம். ஒண்டுக்கொண்டு நல்ல உதவியாய் இருந்தவை. எங்கடை பிரச்சனை முழுக்க நாக நாதியின்ரை மகள் கோமதிக்கு வடிவாத் தெரியும். போன மாதம் இவை இரண்டு வீட்டுக்கும் பெரிய கொழுவல் வந்திட்டுது. இந்த நாசமறுத்த சீட்டால வந்த பிரச்சனை. என்ன?..... இரண்டு பேரும் ஆளையாள் ஏமாத்த வெளிக்கிட்டினம். பிரச்சனை முத்திட்டுது. மாறி மாறி ஒரே பேச்சு, கனடாவுக்கு நீயா நானா முந்தி வந்தனி எண்டு மரியாதைப் பேச்சுக்களும் அமர்க்களமாய் இருந்தது. அதோடை...... மார்க்கண்டு உனக்கும் தெரியும் தானே...... நாகநாதின்ரை பெட்டை கொஞ்சம் வாய்க்காறிதான்..... அவள் பாவி. என்ரை மகளை ஒரு வெருட்டு வெருட்டினாள், என்ரை மகள் உடன சரண்டர். பகிடி என்ன தெரியுமே.....மார்க்கண்டு, அவள் பேசினாள்,...... அடியேய் மங்கை நான் நினைச்சன் எண்டால்...... ஒரு ரெலிபோனோடை உன்ரை கொட்டம் அடக்குவனடி...... அப்பதான் உனக்கு என்னைப் பற்றி தெரியும் எண்டாள். என்ரை மகள் மங்கைக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போய் வாயே திறக்கேல்லை. இவளுக்கு விளங்கிட்டுது. எங்கடை பிரச்சனையை வெல்பெயருக்கு சொல்லப் போறாள். அதுதான் வெருட்டுறாள். அதனால ஒரு கதையும் கதைக்கேல்லை. அடுத்த நாள் எங்கள கூப்பிட்டு பெரியவள் சொன்னாள். ஐயா நீங்களும் அம்மாவும் இதுக்கு இருந்து கஸ்ரப்படுகிறது சரியில்லை. வேறு ஒரு வீட்டில் நீங்கள் றூம் எடுத்து இருங்கோ... நானும் உங்கடை காசைத் தாறன் எண்டு சொல்லி அடுத்த நாளே வீடே மாறிட்டம். அதோடை மகள் மங்கையும் கோமதின்ரை கால்ல விழாமல் விழுந்தடிச்சு உறவைப் புதுப்பிச்சுப் போட்டாள். இதில ஒரு விசயம் பார் மார்க்கண்டு..... எங்க கை வைக்கோனுமோ அங்க கை வைச்சால் வேலை தன்பாட்டில நடக்குது.

வேறென்ன....... மார்க்கண்டு பொன்னுத்துரையின் மகள் பூமணி பிள்ளைக்கு பிறந்த நாள் கொண்டாட்டம் நல்ல வடிவாய் நடந்தது, நீ யேன் வரவில்லை..... ஏன் உனக்கு அழைப்பு தரவில்லையா..... மார்க்கண்டு. அவை எல்லாம் சொன்னவைதான் ஏரம்பு, எனக்குத்தான் வருவதற்கு மனம் இல்லையப்பா ஏரம்பு........ இந்த பிறந்த நாள் கொண்டாட்டம் அளவுக்கு மீறி..... தங்கடை தகுதிக்கு மீறி..... தன்னை உணராமல் கொழுப்பில நடக்குது. நான் ஏன் போகவேணும்? சரி..... ஒரு கேள்வி கேக்கிறன்.... இந்தப் பூமணியின்ரை அப்பன் ஆத்தையும் வன்னிக் காட்டுக்குள்ள என்னபாடோ என்று நினைத்துப் பார்த்தாளா? இல்லையே.. இப்படியான ஈனம் கெட்ட நிகழ்வுக்கு நான் போகவேணுமா? இப்ப கனடாவில எங்கடை சனத்திற்கு.... தாங்கள் ஏன் வந்தோம்....... எங்கிருந்து வந்தோம் எண்ட நிலையே மாறிப்போச்சு...... எட ஏரம்பு ஒரு நல்ல உதாரணம் உறைக்கும் தான்..... பரவாயில்லை சொல்லுறன். இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தில ஆட்டு எலும்பு சூப்பிக் கொண்டு இருக்கையிலை...... எத்தனை பேருடைய அப்பன் ஆத்தை தன் மகனை நினைத்துக் கொண்டு ஒரு நேர சோறுக்கு கையேந்துதுகள் தெரியுமோ? இந்தப பாவம் சும்மா விடாது ஏரம்பு. அது தான் இப்படியான கூத்துக்களுக்கு நான் போறதில்லை.

சொன்னாப்போல நான் கேள்விப்பட்டன் ஏரம்பு...... உந்த மல்லி ஸ்ரோர் மணியத்தின்ரை மகன் குணம், பிறந்த நாள் கொண்டாட்டத்திலை வலு தப்பா போட்டுட்டு தடல் புடலாய் சபைக்கு கறி பரிமாறினானாம். சனங்கள் அவனைப் பற்றித் தான் கதையாம்...... ஆனால் ஒன்று பார் ஏரம்பு இந்தக் குணத்தின்ரை தாயும் தகப்பனும் வட்டக்கச்சிக்குள்ள படும்பாடு....... வேதனையின் கொடுமையை குணம் அறிஞ்சிருப்பானா? இவங்களெல்லாம் கோட்டும் சூட்டும் போட்டுட்டு எப்பிடித்தான் சபைக்கு வாறாங்களோ தெரியாது? ஏரம்பு....... சரியான கவலை என்னண்டால் தாய் செத்து ரெண்டுகிழமையாகல்லை குணம் கொண்டாட்டத்திற்கு வந்திட்டுது.

- 20ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல தரம்! நாவூறும் சுவை!

# யாழ் கேக் ஹவுஸ்

# YAARL CAKE HOUSE

கேக் வகைகள் தயாரிப்பதில் அனுபவ முத்திரை பதித்தவர்கள்.
ஓம்! ஒன்றா இரண்டா கனடாவில் பதின்மூன்று ஆண்டுகள்
அனைத்து இன மக்களின் பாராட்டையும் பெற்றவர்கள்.
திருமணமா? பிறந்தநாளா? ஆண்டுப்பூர்த்தியா?
மங்கள மகிழ்வா?
எந்த வைபவத்தையும்
"அந்த மாதிரி"
நடாத்தத் தேவையான
கேக், சைவக்கேக், றீச்கேக்
போன்றவற்றிற்கு அழையுங்கள்.
நல்ல தரம்!
நாவூறும் சுவை!!



From $9.99

தொடர்புகளுக்கு: T.CHANDRA
Tel:-(416) 431-6874 (416) 266-4716
Fax:- (416) 264-0948
556 MARKAM ROAD,
SCARBOROUGH, ONT.,
M1H 2A3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ நினைத்தால் வாழலாம்

- கோப் மேயர்

## 3 ஏவுகணையிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்வது எப்படி?

ஏவுகணையை நிர்மாணிக்கின்ற புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொண்டுள்ள மனிதனுக்கு, அதனிடம் இருந்து சில பாடங்களைக் கற்றுகொள்ளும் புத்திசாலித்தனமும் இருக்க வேண்டும்.

குறிவைக்கப்பட்ட இடத்தை நோக்கிச் செல்லுகின்ற இயந்திர நுட்பம் ஏவுகணையில் இருக்கிறது. அது தன்னுடைய பாதையில் இருந்து சற்றே விலகினாலும் - செல்லுகின்ற திசையில் தவறு நிகழ்ந்தாலும் - இப்படி அடிக்கடி நிகழ்வது உண்டு. அதைச் செலுத்துகின்ற அமைப்பு தேவையான திருத்தங்களைச் செய்து, இலக்கை நோக்கிச் செல்லுகின்ற சரியான பாதையில் அதைத் திருப்பி விடுகிறோம்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏவுகணை நிலையாக இருக்கும்போது அதன் போக்கை அது திருத்திக் கொள்ள முடியாது. இலக்கை நோக்கி அது நகர்ந்து செல்லும் போதுதான் அதனுடைய தவறுகளை அது திருத்திக் கொள்ள முடியும்.

ஏவுகணையிடம் இருந்து நீங்கள் இப்போது என்ன தெரிந்துகொள்ளப் போகிறீர்கள்? வாழ்க்கை பூராவும் உங்களுக்குப் பயன்தரக்கூடிய நல்ல படிப்பினைகளை நீங்கள் கற்றுக்கொள்ள முடியும்.

1. வாழ்க்கையில் உங்களுக்கு இலக்கு இருக்க வேண்டும். மனவியல், நிபுணர்கள் "லட்சியப்பூர்வமான வாழ்க்கை நோக்கு" என்று சொல்லுவார்கள்.

2. உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் செல்லுகின்றபோது, ஏவுகணையைப் போலவே பாதை மாறுதல், திசை மாறுதல் போன்ற தவறுகளை நீங்களும் செய்வீர்கள்.

3. இந்தத் தவறுகளை, நீங்கள் தவறுகள் என்று ஏற்றுக்கொள்ளக் கற்க வேண்டும். இல்லாவிட்டால் திருத்தம் தேவையென்பதே உங்களுக்குத் தோன்றாமல் போய்விடும்.

4. தவறுகளை அடையாளம் கண்டு ஏற்றுக்கொண்டு விட்டபிறகு அவற்றை திருத்திக் கொண்டு இலக்கு நோக்கிய சரியான பாதைக்கு நீங்கள் வந்துவிட வேண்டும். தவறுகளுக்காக ஏவுகணை எவ்வாறு குழப்பமோ, வெட்கமோ அடைவதில்லையோ அதைப்போலவே நீங்களும் நேர்ந்துவிட்ட தவறுகளுக்காக குழப்பம் அடையக்கூடாது. வெட்கப்படக்கூடாது. தவறுசெய்வதும், அதைக் கண்டுபிடித்து ஏற்றுக் கொள்வதும், பின்னர் திருத்திக் கொள்வதும் இலக்கை நோக்கி சரியாகச் செல்லுகின்ற வழி என்பதை ஏவுகணையைப் போலவே நீங்களும் அறிந்து இருக்க வேண்டும்.

ஏவுகணைகள் எவ்வாறு ஒரே நேர்க்கோட்டில் சென்று இலக்கை அடைவதில்லையோ, அதைப் போலத்தான் மனிதர்களும் நேராகவே சென்று இலக்கை அடைந்துவிட முடியாது. ஏவுகணைகளும் சரி, மனிதர்களும் சரி அந்த அளவுக்கு முழுமை பெற்று இருக்க முடியாது. அப்படியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. அதனால் தான் திருத்திக் கொள்ளும் உபாயம் தேவைப்படுகின்றன.

ஏவுகணையில் அதைச் செலுத்துகின்ற அமைப்பு தவறுகளைக் கண்டறிந்து திருத்துகின்ற சாதனத்தையும் கொண்டதாக இருக்கிறது. உங்களை வழிநடத்திச் செல்லுகின்ற அமைப்பு பற்றி உங்களுக்கு எந்த அளவுக்குத் தெரியும்?

வாழ்க்கையில் உங்களுக்கு இலக்கு இருக்கிறதா? ஒரே ஒரு முக்கியமான இலக்கைத்தான் நீங்கள் குறி வைத்திருக்கிறீர்களா? உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு ஒரே சமயத்தில் பல திசைகளில் அமைந்த பல்வேறு இலக்குகளை நோக்கி உங்களுக்கு வழிகாட்டுவதாக எண்ணிப்பாருங்கள். அது எவ்வளவு குழப்பமானதாக இருக்கும் என்று அப்போது உங்களுக்குப் புரியும்.

அதனால்தான் ஒரே இலக்கைக் கொண்டவன் சீக்கிரமாகவும், வெற்றிகரமாகவும் அதைச் சென்று அடைகிறான். ஒரே சமயத்தில் பல காரியங்களைச் சாதிக்க முயற்சிக்கிறவன் தடுமாற்றமான பாதையில் சென்று வாழ்க்கையை வீணாக்கிக் கொள்கிறான்.

நீங்கள் உங்கள் இலக்கை நோக்கித் தொடர்ந்து முன்னேறிக் கொண்டு இருக்கிறீர்களா? நீங்கள் அசையாமல் இப்படியே இருந்தால் உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு, திருத்தங்கள் எதையும் சொல்ல வழி இருக்காது. ஆகவே தொடர்ந்து சென்றுகொண்டு இருங்கள். நிற்காதீர்கள். தவறு நேர்ந்துவிடுமோ என்று தயக்கம் காட்டாதீர்கள். முன்னேறிச் செல்லுகின்ற போது தவறு நேர்ந்தால் திருத்திக் கொண்டு விடலாம். வாழ்க்கை என்பது சைக்கிள் விடுவதைப் போன்றது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கொண்டிருக்கும் போதே திசையில் தவறு ஏற்பட்டால் திருத்திக் கொண்டு விடலாம். சைக்கிள் ஓட்டுவதை நிறுத்தினால் பேலன்ஸ் தவறி, தடுமாறி விழவேண்டி இருக்கும்.

தவறுகள் நிகழும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டும். உடனுக்குடன் அவற்றை திருத்திக் கொள்வதற்காக கவனமாக அவற்றை கண்காணிக்கவும் வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு உடனடியாகத் தவறை திருத்திக் கொள்ளுகிறீர்களோ அந்த அளவுக்கு பாதை மாறுவதையும் தவிர்க்கலாம். இலக்கு நோக்கிய திசையினையும் சரிப்படுத்திக் கொண்டு விடலாம்.

தவறுகளை வாழ்க்கையின் ஒரு பகுதியாக நீங்கள் ஏற்றுக்கொண்டு விடுவதால் தவறுகளைப் பார்த்துக் குழப்பம் அடையவோ வெட்கப்படவோ அவசியம் இருக்காது. குற்ற உணர்வில் இருந்தும் விடுதலை பெறுவீர்கள். குற்ற உணர்வின் விளைவாக ஏற்படுகின்ற குழப்பங்களுக்கும் இடம் இருக்காது.

தவறுகளை வாழ்க்கையின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளுகிறபோது, வழிகாட்டும் அமைப்பு ஒன்று உங்களிடம் செயல்படுவதையும் ஏற்றுக் கொள்கிறீர்கள். இந்த அமைப்பு உங்களின் முக்கிய லட்சியத்தை நோக்கி உங்களைச் செலுத்தும்.

லட்சியத்தை நோக்கிச் செல்லுகின்ற விதத்தில் உங்களின் வழிகாட்டும் அமைப்பை எப்படி நீங்கள் செயல்படுத்தப் போகிறீர்கள்? அதற்கான வழி இதோ:

அ) உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு கணிப் பொறி (கம்ப்யூட்டர்) போன்றது. உங்களுடைய நினைவு என்கிற கணிப்பொறியில், உங்கள் லட்சியம் பற்றிய முழுத்தகவல்களையும் கொடுங்கள். (இந்த கணிப்பொறி உங்களுடைய ஆழ்மனம்தான்) இப்படி நீங்கள் செய்துவிட்டால், உங்கள் லட்சியம் என்ன என்பதை உங்களுடைய வழிகாட்டு அமைப்பு சந்தேகத்திற்கு இடம் இன்றித் தெரிந்து வைத்துக் கொள்கின்றது.

ஆ) உங்கள் லட்சியம் என்ன என்பதை உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு முழுமையாகத் தெரிந்து கொண்ட பிறகு, லட்சியம் நோக்கி நேராக உங்களைச் செலுத்தும். எப்படி என்று நீங்கள் அதற்கு சொல்லித்தரத் தேவையில்லை. உங்களுடைய ஆழ்மனம் என்பது பிரபஞ்ச அறிவின் ஓர் அங்கம். பிரபஞ்சத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும், உங்களின் இதயத்துடிப்பில் இருந்து கிரகங்களின் சுழற்சி வரை இந்தப் பிரபஞ்ச அறிவுதான் வழிகாட்டி செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. உங்கள் லட்சியத்தை நோக்கி அது சுலபமாக உங்களை வழி நடத்திச் செல்லும்.

இ) நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுடைய வழிகாட்டும் அமைப்பு சொல்லுகின்ற வழியில் நடந்து அதற்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுப்பது மட்டும்தான். உங்கள் லட்சியத்தை அடைவதற்குத் தேவையான ஆற்றலும் சக்தியும் உங்களுக்குக் கிடைக்கும். மன இறுக்கம் இன்றி நீங்கள் இருந்தால் போதும். நீங்கள் செல்ல வேண்டிய திசையில் அது உங்களைச் செலுத்தும்.

ஏவுகணையின் வழிகாட்டும் அமைப்பை உருவாக்கி வைத்த மனிதன், தன்னிடமே அப்படி ஓர் அமைப்பு இருப்பதைக் கண்டு கொண்டிருக்கிறான். தன்னுடைய லட்சியத்தை மனப்படமாக தொடர்ந்து கற்பனை செய்வதன் மூலம், அதை நோக்கித் தன்னை அழைத்துச் செல்லுகின்ற வழிகாட்டும் அமைப்பு தன்னிடமே இருப்பதை அறிந்துகொண்டு இருக்கிறான்.

---

17ம் பக்கத் தொடர்ச்சி

எப்ப எங்கடை சனம் தங்களையும்...... தன் இனத்தின் நிலையையும் உணர்ந்து இந்த அளவுக்கு மீறிய தேவையற்ற களியாட்டங்களையும், கொண்டாட்டங்களையும் குறைக்கினமோ அண்டைக்குத்தான் தமிழனுக்கு விமோசனம். ஏரம்பு...... சரி......இதுகளைத் கதைக்க வெறும் வாய் சப்பி என்ன பலன். அடுத்த கிழமை சந்திப்பம் ஏரம்பு..... நான் வாறன். ஓமோம்!!!!

-பரமசிவத்தார்.


## தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி

## 5வது ஆண்டு விழா

கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள் இணைந்து வழங்கும்
பல்சுவை கலை நிகழ்ச்சிகள்
தமிழிசை, நடனம், நாடகம்,
பயணக்கைதிகள் (உண்மைச் சம்பவம்),
வாத்திய இசை
மற்றும் பல.......

இடம்: **Winston Chuchill Collegiate**
**2239 Lawrence Ave. East, Scarborough**
**(Kennedy/ Lawrence)**

காலம்: யூன் 21 1997 சனிக்கிழமை

நேரம்: மாலை 6 மணி

தொடர்புகளுக்கு:-

**(416) 757-9601**
**(416) 757-9592**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மகள்
தரணியெங்கும்
தமிழ் வளர்க்கும்
கலைமகளாக
வளர
வாழ்த்துகின்றோம்

செல்வசேகரா நகை மாளிகை

*2347 Eglinton Ave. East,*
*Scarborough, Ont.*
*(1 Block West Of Kennedy)*
*Tel:-(416) 285-7269 Fax: (416) 285-6361*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபுறோ பிறின்டேர்ஸ்

## அழகு தமிழ் அமைப்புக் கோட்டம்

**அச்சக உலகில் புதிய புதுமை.........!**

உங்கள் எண்ணங்களை எழுத்தாக்கி கலையாக்கி மகிழ்விப்போம்.

திருமண அழைப்பிதழ்கள்

பிறந்த நாள் வாழ்த்துக்கள், அழைப்பிதழ்கள்

பூப்புனித நீராட்டு அழைப்பிதழ்கள்

கல்வெட்டுக்கள்

மற்றும் உங்கள் தேவைகள் எதுவோ அதனை எழுதித் தயாரித்து உங்களுக்குச் சிரமம் இல்லாமலத் தருவோம்.
தரம் – நேரம் – சிக்கனம் எங்கள் ஸ்தாபன மந்திரம்.
இந்த மந்திரத்தால் நீங்கள் திருப்தி கொள்வீர்கள்.

உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**சங்கத் தமிழ் வேண்டுமா?**
*புதுமைத் தமிழ் வேண்டுமா?*
**இன்பத் தமிழ் வேண்டுமா?**
இலகு தமிழ் வேண்டுமா?
எந்தத் தமிழிலும் எழுதித் தயாரித்துத் தருவோம்.

**வாருங்கள்!!!**

ஒருமுறை வந்தால் பலமுறை பாராட்டுவீர்கள்.
133 Mansvill Road Unit 25
Scarborough
தொலைபேசி இலக்கம்: (416) 751 - 2022


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org